204

# ஜகன் மோகினி


ஏவிளம்பி ௵ வைகாசி மீ 1—6—57 25 நயா பைசா

## நக்ஷத்ர மண் [illegible]

பத்மினி
பேசுகிறார்:

மலர் 34 இதழ் 6.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1957
MADRAS
204
3-57



நல
ஜெகன் மோகினி
M 57.346.
183209



# ஜகன்மோகினி



ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

ஜூன் 1957. மலர் 34, இதழ் 6. ஏவிளம்பி ஹு வைகாசி மீ

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சக்கரம், ஓடுகிறவரை ஓடட்டும் ஒடிந்தால்...! —V.K. பார்த்தசாரதிஐயங்கார் | 1 |
| பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி | 6 |
| எங்களது இன்பச் செலவு —T. S. ராஜகோபாலன் | 9 |
| ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 14 |
| காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி | 17 |
| நக்ஷத்ரமண்டலம் மத்மினி பேசுகிறார் —சாரக்ராகி | 20 |
| உத்தமியின் மறைவு —வை.மு. பத்மினிஸ்ரீநிவாஸன் | 24 |
| தாயின்மணிக்கொடி —சின்னரங்கா | 27 |
| வை.மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு.விஜயலக்ஷ்மி | 209-224 |


## மதிப்புரை

[முத்திருப்பதி முத்தமிழ்மாலை. 2. திருவாழியாழ்வான் மாலை. 3. திருப்பதி மாலை. 4. திருநட்சத்திரமாலை. 5. கோகுலக் கண்ணன் மாலை. 6. சுந்தர ஆஞ்சநேயமாலை. வெளியிட்டவர்: ஸ்ரீமான் வித்வான் ப. ரெ. திருமலை அய்யங்கார், ஸ்ரீ ரெங்கவிலாஸம், ஸ்ரீமௌந சுவாமிகள் மடத்துத்தெரு, அம்பத்தூர்.]

இந்த 6 நூல்களும் அம்பத்தூர் அறநெறி அரங்க வெளியீடுகள். இவை முறையே-13, 15, 18, 19, 20, 21—எண் உள்ளவை. மதுரைகவி ஸ்ரீநிவாஸய்யங்கார் மலர்களாகவும் மணம் கமழ்பவை. முறையே 2, 4, 7, 8, 9, 10—எண் அமைந்தவை.

(தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்)

# சக்கரம், ஓடுகிறவரை ஓட்டும் ஒடிந்தால்...!

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பீ.எல்.,

### ஏழைமக்களின் கூக்குரல்

தேதி 22-5-57: வீட்டு வாசலில் கரிகாய்க் கூடைக் காரிகும், வீட்டுக்காரம்மாளுக்குமிடையே சச்சரவு:

"என்னடி, கீரை கெட்டகேடு. காலணுக்கு ஒரு கட்டு சிப்பட்டது போக, இப்போ என்ன வந்துடுத்து, ஓரணு கேழ்க்கிறியே".

"ஏழெங்க வவுத்திலே அடிச்சு, மித்தெ வீடு கட்டி வாழப் பாக்கறவங்கள்ளாந்தான், வரி போடமாட்டோ மின்னு ஏமாத்தி ஓட்டு வாங்கிட்டு, இப்போ, தீப்பெட்டி, கிரிஸனுயில், சக்கரை, எண்ணை, எல்லாத்துக்குமா வரி போட்டுட்டாங்களே".

"நன்னுயிருக்கடி நீ சொல்ற நியாயம். கிரிஸனுயில் வரி தான் எடுத்துட்டாங்களே. எதெதுக்கோ வரி போட் டாக்கா, கீரை விலையையும், கத்திரிக்கா விலையையும் ஒன்னுக்கு நாலாகத் தூக்கச் சொன்னுங்களா என்ன, காங்கிரஸ்காரருங்க".

"விலையை தூக்காதீங்கோன்னு சொல்லிக்கினுதான் வரியை தூக்கி இருக்குருங்க. நாங்க, சக்கரை, தீப்பொட்டி, தபால் கடுதாசி, இதெல்லாம் துட்டு போட்டுதானேம்மா வாங்கணும். இதுக்கெல்லாம் நாங்க முன்னெக்கி இப்போ நாலு பங்கு ஜாஸ்தி விலே கொடுக்கனுமின்னு, இந்தக் கீரையை நாலு பங்கு ஜாஸ்தி விலைக்கு வித்துச் சம்பா திச்சுத்தானே கொடுக்கணும். எங்களைக் கோவிச்சுண்டு என்னம்மா பிரயோசனம்? வரி போட்றவங்களைக் கண்டி யுங்க, சாமார்த்தியமிருந்தா".

விஷயம் புரிஞ்சுதோல்லியோ. இந்த சம்பாஷணையே போதும் ஏழை மக்களது நிலைமையைப் படம் பிடிப்பது போல எவர்க்கும் எடுத்துக் காட்ட—.

### குல்லாய்க்குத் தகுந்த தலையா ?

இருந்தும், நிதிமந்திரி கூறுகிருர்: "இரண்டாவது ஐந் தாண்டு திட்டம் நிறுவப்பட்டுள்ளதே. அதை நான் நிறை வேற்றியாகவேண்டுமே. அதற்கு வேண்டிய பணத்தைப் பொதுமக்கள் மீது வரி சுமத்தி வசூலிப்பதை விடுத்து, வேறென்ன வழி?"

சத்வ குணம் மேலிடும். அச்சமயம் அவன் சாதுவாகி விடு கிறான். மறுபடியும் வேறு குணம் மேலிட்டு வேறுவிதமா கிறான். மூன்று குணங்களும் மாறிமாறி மனிதனை ஆட்டு கின்றன. யாரையும் இகழ்தல் கூடாது. யாருமே நான் சத்வ குணம் பெற்றுவிட்டேன் என்று அஜாக்கிரதை யாகவோ, அகங்காரமாகவோ பட்டுவிடலாகாது. பிற ருடைய குற்றங்களைக் கண்டு அவர்களை வெறுத்தலோ, கோபித்தலோ செய்தால் அதுவும் நம்முடைய ரஜோகுண வேகமே. ஆன்ம சக்தியைக் கொண்டு சத்வ குணத்தை வளர்த்து வரலாம். மற்றக் குணங்களை அடக்கி வரலாம். ஒவ்வொருவரும் இந்த மூன்று குணங்களைக் கொண்டு உண்டானவரே. அவற்றில் எது ஓங்குகிறது, எது குறை கிறது என்பதே முக்கியம். சத்வம் ஓங்கி ரஜஸும் தம ஸும் குறைவது வாழ்க்கையின் முயற்சியாகவேண்டும்.

இதற்கு என்ன வழி? ஆண்டவனிடம் பக்தி செய்வதே வழி. அவனைச் சரண் அடைந்து பக்தி செய்தால் இதற்கு வேண்டிய சக்தி உண்டாகும். இதுவே இந்த அத்தியா யத்தின் சாரம்.

**சுலோகம் : 1-4**

பகவானே பிதா.

**சுலோகம் : 5-8**

முக்குணங்கள் அனைவருக்கும் உண்டு.

**சுலோகம் : 9-13**

ஒவ்வொரு குணம் ஒவ்வொரு சமயம் உயர்ந்து மற்ற இரு குணங்களை அடக்கிவிட்டு வேலை செய்யும்.

**சுலோகம் : 14-20**

எந்தக் குணம் தலைதூக்குகிறதோ அதனால் உண்டா கும் பயன்.

**சுலோகம் : 22-25**

கடைசியாக, சத்வ குணம் நன்றாகவும் நிலையாகவும் உயர்ந்துவிட்டால் ஜீவனுக்கு உண்டாகும் மேலான பயன் சொல்லப்படுகிறது. சத்வ குணத்தை வளர்த்து வந்தால், குணங்களை வென்றுவிட்டு அவற்றின் தற்காலிக சேஷ்டை களுக்கு இடம் தராமல் அப்பியாசம் செய்தால் முடிவில் மனிதன் ஞானநிலை அடைவான்.

**சுலோகம் : 26**

குணங்களின் பந்தத்தைத் தாண்டுவதற்கு வழி பக வானைச் சரண் புகுந்து, உள்ளத்தில் இடையறாத தெய்வ பக்தி வைத்து வாழ்வதேயாகும்.

பூர்வ ஜன்ம கர்மங்களின் பயனும் இந்த ஜன்மத்தின் காரியங்களினலும் சிரத்தை, பக்தி; பூஜை அப்பியாசங்களி

விலக்கப்பட்டு விட்டானும். நமது நிதிமந்திரி, இந்த 6 அணா விஷயத்திற்கு இவ்வளவு கடுமையான தண்டனை அவசியமாவென அனுதாபத்துடன் கேட்கிறார்! 'ஆறணாவானாலென்ன? ஆயிரம் ரூபாயானாலென்ன?' என்கிறார் நீதி பேசுவோர். எப்பொழுது இந்த உத்தியோகஸ்தன் அவ்வளவு பகிரங்கமாக ஆறணா லஞ்சம் வாங்கத் துணிந்தானோ, அதற்குஅடிப்படையான காரணமேதாவது இருக்க வேண்டாமா, என்கின்றனர் லஞ்சப்பேயால் வஞ்சிக்கப் பட்டவர்கள். லஞ்ச ஏணியின் அடிப்படியே இந்த ஆறணா. அதன் மேற்படிகளை ஆராய்ந்தறிய எவரும் முன்வரவில்லையே, என்கின்றனர் உலகானுபவம் மிக்கவர். யார் பெயரைக்காக்க இந்த ஏழை குமஸ்தா பலியிடப்பட்டானோ பாவம் என்கிறார்கள் உத்தியோகப் பாதையில் பல கஷ்டங்களநுபவித்து வரும் ஏழை குமாஸ்தாக்கள்.

### ஆசிரியரின் கதியும், மாணவரின் தவிப்பும்

தஞ்சாவூர் கலியாணராமய்யர் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் நிர்வாகிகளால் விலக்கப்பட்டார். அப்பீலில் தலைமை உபாத்தியாயரைத் திரும்பவும் வேலையிலமர்த்திடச் சட்டத் தீர்ப்பு பிறந்தது. 'வேலைக்கு வா' என்று நிர்வாகிகள் கடிதமெழுதிச் சட்டத்திற்குப் பணிந்து, அவர் உள்ளே நுழைந்ததும், 'வெளியே போ' எனத் திரும்பவும் புது உத்திரவு போட்டுள்ளார்களாம். அப்பள்ளி நிலையே அலங்கோலப்படுகிறதாம். நியாயம் எப்படியாவதிருக்கட்டும். கல்வியின் கதியும், மாணவர் ஒழுக்கமும், ஆசிரியர் நேர்மையும், எந்நிலை போகிறது? சமூக நல அடிப்படையாகிய சிறுவரது போதகாசிரியரும் அக்கல்வித்துறை நிர்வாகிகளுமாகத் தமது உரிமைப் போர் நடத்திக் கொண்டு, மாணவரையும், ஆசிரியர்களையும் கட்சிப் பிரதி கட்சி சேர்ந்து வளர இடங்கொடுத்து வந்தால், பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுக்க வாத்தியார்களுக்கு மனந்தானேது! அவகாசந்தானேது? அரசாங்கமும் இதை ஆதரித்து வளர்க்கிறதே! இடந்தருகிறதே!

### எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்

எல்லாம் சுதந்திர விளைவு! சுதந்திரமென்றால் என்னவென்று அறியாத அரசாங்கமும், தலைவர்களும், குடிமக்களும் நிறைந்த ராச்சியம் படும்பாடா?' மதப்பற்றை விட்டவுடனேயே மனப்பற்று, நேர்வழி விடுத்து, முரண்பாடு நிறைந்த மார்க்கம் நாடித்தானே போகும்! 'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் தானே' என்ற மனப் போக்கு, சுதந்திர நாட்டிலும் மறைவது அரிதாயிற்றே. ஒரு தலைப்பாடில்லாத பல தலை கொள்ளி எறும்புகளிடையே அகப்

பட்டுத் தவிக்கிறோம் நேர்மையும், சீலமும், சத்தியமும் விரும்பும் வேண்டப்படாச் சிலர்.

**பிராம்மணீயம் என்றால் என்ன ?**

'பிராமணர்' என்ற பெயரே சாப்பாடு விடுதிகளிலும் காணப்படக்கூடாதாம் சிலருக்கு! 'பிராமணர்' என்ற பெயர் கொண்டோரையெல்லாம் வெளியேற்றிவிட வேண்டுமாம் வேறு சில கட்சியாருக்கு. இவர்கள் பிதற்றுவது தப்பு. பிராம்மணர் இருக்கட்டும். பிராம்மணீயம்தான் ஒழிக்கப்படவேண்டும் என்கிறார் ஒழுக்கம் மிக்க, சட்டசபையில் புகுந்துள்ள, காங்கிரஸ் சீர்திருத்த, திராவிட முன்னேற்றக் கழகத்தார்! இந்த பிராம்மணீய ஒழிப்புப் பிரசாரத்தை, பல காங்கிரஸ் கட்சியாரும், சீர்திருத்தவாதிகளும் ஏற்று மகிழ்கின்றனர். என்ன மதியீனம்! பிராம்மணீயமென்றால் என்ன என்பதை இவர்கள் எவராவது அறிந்துளார்களா? எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் எந்த மதஸ்தராலும், எந்த மக்களாலும் போற்றி வளர்க்கப்படவேண்டிய சமூக நல அடிப்படையன்றோ பிராம்மணீயம்! தெய்வம் என்ற பிரம்மத்தினிடை நம்பிக்கையும், சிரத்தையும், பக்தியும், அதனை அறிந்தோரால், ஓர் வகுத்த விதிப்படி அதனை வளர்த்து, நாட்டின் நலத்திற்காகவும் மக்களின் க்ஷேமத்திற்காகவும் பிரார்த்தனை செய்வதன்றோ சமதர்மமான பிராம்மணீயம்! பிராம்மணீய ஒழிப்பென்றால் நாட்டின் நலத்தையும், மக்கள் க்ஷேமத்தையும், எங்கும் எப்பொழுதும் ஒழிக்கும் ஏற்பாடல்லவா. உண்மையில் இக்காலத்தில் நடந்தேறி வருவது பொதுநல க்ஷேமமென்ற பிரசாரப் போர்வையில், சுயநல லாபக்யாதி விருத்திதானே. இத்தகைய முயற்சியாளர், பிராம்மணீய ஒழிப்பில் ஒத்துழைக்க முன்வருவது அதிசயமல்லதான்.

பிராம்மணீயமே சுதந்திரத்தின் அடிப்படை. சுதந்திரமென்றால் என்ன? துவேஷமென்ற பாசத்தை அறுத்தெறிந்து, அன்பென்னும் பாசத்தால் எந்நாட்டாரும் ஒன்று பிணைக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவராகி, அனைவருமாக அந்தப் பரப்பிரம்மத்தின் உகப்பிற்காக ஒத்துழைத்துச் சுகப்படுவதல்லவா சுதந்திரம்! சேர்ந்து வாழ்வதல்லவா சிறந்த வலிமை! சேர்வதென்றால் என்ன பொருள்? பலவிதத்தாரும் ஒன்று சேருவதேயொழிய, பலவிதத்தாரும் தத்தம் ஆளுமையைப் போக்கிக் கொண்டு அனைவரும் ஒரே சமதர்மத்தினராவதல்ல. சிருஷ்டியே வேறுபாடுகளை வேண்டுகிறது தனது வளர்ச்சிக்கு. சமூக வேறுபாடுகளில்லாது போமாகில் சமூக வளர்ச்சியே கிடையாது. சமூக சிருஷ்டியென்பது மாறுபட்ட பலர், ஒருவரோடொருவரும், ஒன்றோடொன்

றும் ஒத்துழைக்கவேண்டிய பலவகையிலும் வேறுபட்ட ஜாதி, மத ஆசாரானுஷ்டான வகைகள் கொண்டவர்களது கூட்டமேயல்லவா! அன்புடன் யாவர்க்கும் பராதீனப்பட்டிருப்பதேயல்லவா மனச் சாந்தி தரவல்ல உண்மைச் சுதந்திரம்!

**சுயநலப் புலிக்காடேயாகும் நம்நாடு**

ஐந்தாண்டு திட்டத்தின்பேரில் பழியிட்டு, ஏழை மக்களுக்கு இன்றியமையாத் தேவையான தீப்பெட்டி, சர்க்கரை, எண்ணை, தபால் விகிதம், ரயில் பிரயாண விகிதம், வருமானம், சொத்து, சிலவு, விற்பனை, வாங்கல், சிமிட்டு, இரும்பு, காப்பி, டீ போன்ற பானவகை, என்ற இதன்மீதெல்லாம் வரி சுமத்திக் கொண்டுபோய், பஞ்சத்தால் பரதவித்துச் சாகும்வரை வரி கொடுத்து, இடைச் சுரண்டலாளரது லாபத்திற்காகத் தியாகங்கள் செய்து, திட்டங்களை நிறைவேற்றுங்களென நிதிமந்திரிமார்கள் கூறியும், பிரதான மந்திரிகள் ஒத்தூதியும் போய், உண்மை விளைவுகளை எடுத்துக் காட்டும் ராஜாஜீயை எங்கள் நண்பரல்லவெனப் பகிரங்கப் பிரகடனங்கள் செய்து, சமூகத்திலும், அரசியலிலும் என்றும் மூடப்படாத பிளவுப் புண்களைக் கோலிட்டுப் புளி பெய்து வளர்த்துப் போவாராகில் இனி க்ஷேமலாப நாடேது? சமதர்ம சமூகமேது? பொருளாதாரச் சுதந்திரமேது? பண்டைய திட்டங்களைப் பரிகசித்துப் பதவி பெற்று வருவோர் ஒவ்வொருவனும் தனது திட்டத்தையே தனது அதிகார காரணமாய் அவ்வப்பொழுது அமுலுக்குக் கொண்டுவந்தே போனால், திட்டங்களும் மாறும், இஷ்டங்களும் மாறும், கஷ்டங்களும் ஏறும், நஷ்டங்களும் பெருகும், சீர்பட முடியாத சுயநலப் புலிக்காடேயாகித்தான் விடும் சுதந்திரம் பெற்ற நமது இந்திய நாடும்!

**சுவரை இடித்துக் கண்ணாமூச்சி யாட்டமா?**

தன் பெண்டாட்டி பிள்ளைகள் அன்றைய சோற்றுக்கு வழியில்லாது தவித்து நிற்க, அயலகத்தானோடு கலந்து யோசித்து, மூன்றாம் வீட்டுக்காரனது குடும்ப நிர்வாக யோகக்ஷேமாதிசயங்களுக்கும் புத்தி கூறித் திட்டம் வகுக்கிறானும் சமூகத் தலைவனும் பொதுநல அரசியல்வாதி! இந்தியாவின் நிலை தடுமாற்றத்தை அறிந்தும், அப்படிக்கே அதனை வளர்ந்து போக விசிறி, இலங்கைப் பிரதமருடன் கலந்து, ஹெற்ச் பாம்ப் பரீட்சைகளைப் பிரிட்டன் பஸிபிக் மகா சமுத்திரத்தில் போட்டும் பார்ப்பதால் விளையும் தீமைகளைத் தீவிரமாய் எடுத்துக் காட்டி, அப்பரீட்சைகளைக் கண்டிக்க முன்வருவதால், இந்தியாவின் உள்நாட்டுப்

(தொடர்ச்சி 26 -ம் பக்கம் பார்க்க)

# பகவத்கீதைக் குறிப்புகள்

ஸ்ரீ ராஜாஜி

## பதினாலாவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தின் கருத்து என்னவென்றால் யாருமே குற்றமும் குறையும் கொண்டவர்கள். பிறருடைய குற்றங்களைக் கண்டு மனத்தில் விகாரம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. பிறர் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

நம்முடைய உள்ளத்தில் குற்றம் ஏற்பட்டாலும் அதனால் கலக்கம் அடைந்து எனக்கு நற்கதியில்லை என்று நிராசை செய்துகொள்ளக்கூடாது. எந்தக் குற்றத்தையும் தீர்த்துக்கொள்ளலாம்.

"அனைவருக்கும் பிரகிருதியே தாய்; நான் பிதா" என்கிறான் பகவான். ஒரு தாயின் வயிற்றில் ஒரு தகப்பனுக்குக் குழந்தை பிறந்தால் அது உண்மையில் பகவானுடைய குழந்தை. "அதற்குத் தகப்பன் நான்" என்கிறான் பகவான். ஆனபடியால் சர்வ ஜீவன்களும் உண்மையில் ஒரு சமம்.

ஒவ்வொரு ஜீவனுக்கும் மூன்று குணங்களும் தரப்பட்டிருக்கின்றன. இது ஈசுவரன் செய்திருக்கும் அமைப்பு. சத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று வகையாக உள்ளத்தில் எழும் எண்ணங்களையும், அவற்றால் உண்டாகும் செயல்களையும், பயன்களையும் வகுக்கலாம். சத்வ குணம் அறிவு உண்டாக்குகிறது. அந்த அறிவினின்று அடக்கம் பொறுமை முதலியவை உண்டாகின்றன. ரஜோ குணத்திலிருந்து ஆசை, உற்சாகம், கோபம் முதலியவை உண்டாகின்றன. தமோ குணத்திலிருந்து தூக்கம், அறியாமை, சோம்பல், அஜாக்கிரதை முதலியவை உண்டாகின்றன.

நாம் நினைவில் வைக்கவேண்டியது என்னவென்றால் இந்த மூன்று குணங்கள் எல்லாருக்குமே உண்டு. ஒரு சமயத்தில் ஒரு குணம் மேல் எழுந்து நின்று, மற்ற இரண்டு குணங்களையும் அடக்கிவிட்டுத் தன் வேலையைச்செய்கிறது. அந்த வேகத்தின் பயனைத்தான் அந்த மனிதனில் நாம் காண்கிறோம். நல்லவர்கள் என்று வழக்கமாக மதிக்கப்படுகிறவர்களும் சில சமயம் ரஜோகுணம் மேலிட்டு அதன் பயனாகச் சில எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் இரையாகிறார்கள். அவ்வாறே சில சமயம் தமோ குணம் அவர்களைப் பிடித்துக் கொள்கிறது. சாதாரணமாகக் கோபமும், தாபமும் காட்டும் மனிதனுக்குச் சில சமயங்களில்

சத்வ குணம் மேலிடும். அச்சமயம் அவன் சாதுவாகி விடுகிறான். மறுபடியும் வேறு குணம் மேலிட்டு வேறுவிதமாகிறான். மூன்று குணங்களும் மாறிமாறி மனிதனை ஆட்டுகின்றன. யாரையும் இகழ்தல் கூடாது. யாருமே நான் சத்வ குணம் பெற்றுவிட்டேன் என்று அஜாக்கிரதையாகவோ, அகங்காரமாகவோ பட்டுவிடலாகாது. பிறருடைய குற்றங்களைக் கண்டு அவர்களை வெறுத்தலோ, கோபித்தலோ செய்தால் அதுவும் நம்முடைய ரஜோகுண வேகமே. ஆன்ம சக்தியைக் கொண்டு சத்வ குணத்தை வளர்த்து வரலாம். மற்றக் குணங்களை அடக்கி வரலாம். ஒவ்வொருவரும் இந்த மூன்று குணங்களைக் கொண்டு உண்டானவரே. அவற்றில் எது ஓங்குகிறது, எது குறைகிறது என்பதே முக்கியம். சத்வம் ஓங்கி ரஜஸும் தமஸும் குறைவது வாழ்க்கையின் முயற்சியாகவேண்டும்.

இதற்கு என்ன வழி? ஆண்டவனிடம் பக்தி செய்வதே வழி. அவனைச் சரண் அடைந்து பக்தி செய்தால் இதற்கு வேண்டிய சக்தி உண்டாகும். இதுவே இந்த அத்தியாயத்தின் சாரம்.

**சுலோகம் : 1-4**

பகவானே பிதா.

**சுலோகம் : 5-8**

முக்குணங்கள் அனைவருக்கும் உண்டு.

**சுலோகம் : 9-13**

ஒவ்வொரு குணம் ஒவ்வொரு சமயம் உயர்ந்து மற்ற இரு குணங்களை அடக்கிவிட்டு வேலை செய்யும்.

**சுலோகம் : 14-20**

எந்தக் குணம் தலைதூக்குகிறதோ அதனால் உண்டாகும் பயன்.

**சுலோகம் : 22-25**

கடைசியாக, சத்வ குணம் நன்றாகவும் நிலையாகவும் உயர்ந்துவிட்டால் ஜீவனுக்கு உண்டாகும் மேலான பயன் சொல்லப்படுகிறது. சத்வ குணத்தை வளர்த்து வந்தால், குணங்களை வென்றுவிட்டு அவற்றின் தற்காலிக சேஷ்டைகளுக்கு இடம் தராமல் அப்பியாசம் செய்தால் முடிவில் மனிதன் ஞானநிலை அடைவான்.

**சுலோகம் : 26**

குணங்களின் பந்தத்தைத் தாண்டுவதற்கு வழி பகவானைச் சரண் புகுந்து, உள்ளத்தில் இடையறாத தெய்வ பக்தி வைத்து வாழ்வதேயாகும்.

பூர்வ ஜன்ம கர்மங்களின் பயனும் இந்த ஜன்மத்தின் காரியங்களினாலும் சிரத்தை, பக்தி, பூஜை அப்பியாசங்களி

ணுலும் உள்ளத்தில் ஏற்படும் குணபந்தங்கள், அவற்றின் ஏற்றத் தாழ்வுகள், இவற்றைப் பற்றி இந்த அந்தியாயத்தில் சொல்லப்பட்டது.


கர்மத்தின் பயன் குணம். குணத்தின் பயன் காரியம். குணமே விதை. அதன் பயன் வாழ்க்கை. முயற்சியால் அந்த விதையை நல்ல விதையாக்கிக் கொண்டு முன்னேறலாம்.

வாத பித்த சிலேஷ்ம தாதுக்கள் சரீரத்தில் மூன்றும் சேர்ந்திருப்பதைப் போல் மூன்று குணங்களும், அதாவது சத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்றும் சேர்ந்தும் உயிரின் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. குணங்கள் சரீரத்தைச் சேர்ந்தனவா அல்லது ஆன்மாவை சேர்ந்தனவா என்கிற கேள்வி பிறக்கிறது. இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகிறதைப் பார்த்தால் குணங்கள் ஆன்மாவையும் சரீரத்தையும் ஒன்ருக இணைக்கும் இணைப்பு முடிகளாக வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. குணங்கள் சரீரத்தின் காரியங்களுக்குக் காரணம். சரீரத்தின் காரியங்களின் காரணமாகக் குணங்கள் உண்டாகி வளர்கின்றன. காரணமும் காரியமும் ஒன்றையொன்று தூண்டிக்கொண்டு செல்லுகின்றன. ஆனல் ஆன்மாவின் மெய்ப்பான்மை சரீரத்தில் தீண்டாதபோது ஈசா உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி.

ஸ பர்யகாத் சுக்ரம்
ஆகாயம் அவ்ரணம் அஸ்நாவிரம்
சுத்தம் அபாப வித்தம்
கவிர்மனீஷீ பரிபூஸ்வயம்பூ :
யாதா தத்யத: அரித்தான் வ்யததாத்
சாச்வதீப்யஸ்ஸமாப்ய :

ஆத்மாவானது பாபத்தால் சேதப்படாது. சுத்தமான பொருள். பரம்பொருளின் அம்சம் என்பது இந்த மந்திரத்தில் சித்தாந்தம்.

---



மனைவி :—ஏன்னு ஆபீஸ்கு நாழி ஆகலயா ?

கணவன் :—அடி போடி. இன்ப்ளுயன்ஸான்னு வந்தவா பாதி, வராதவா பாதியா ஆபீஸ் காலி. போனு வேலே மென்னியை பிடிக்கும். லீவ்போட்டுட்டு, யூகிலிபுட்ஸைபடுக்கையிலே தெளித்தால் போச்சு.... வா....

# எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

## 6. துவாரகை

கொம்பின் தனந்தோயக் கோள்விடைகள் ஏழின்கூர்க்
கொம்பின் இடைநின்றான், கோவேந்தர்—கொம்
பினுக்காய்
பாய்புரவித் தேரூர்ந்தான் பொன்னடிக்கள் போற்றிடு
வோம்
வாய்புகழ்சேர் மூன்றெழுத்தால் நாம்.

பொழுது விடிவதற்குமுன் விழித்தெழுந்தோம். மனமும் புலனைந்தும் துவாரகையை நாடின. அன்று போர் மன்னர் செறிந்த பெருஞ் சபையில் கற்புக்கு அருங்கலமாகிய திரௌபதி இடருற்று, "கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் சரணகதாம்" என்று கூவியது செவியில்பட்டதுபோல் தோன்றியது. இறைவனது பெயரின் மகிமையால் துகில் வளர்ந்ததும், அவளுக்கும் அவளது கணவர்க்கும் அவன் பலகால் பலவாறு உதவி செய்தும், ஒன்றுஞ் செய்யாதவன்போல், "அன்று தூரவாஸியான என்னை திரௌபதி ஹே கோவிந்தா! என்று கூப்பிட்டாள்; அவளுக்கு நான் நேரில் சென்று உதவப் பெற்றிலேனே என்று புண்பட்டுக் கிடக்கின்றது என் மனம்" என்ற பக்தவத்ஸலனது பொன்மொழிகளும் என் நெஞ்சை நீராக்கின. எனது கரங்கள் தலைமேல் குவிந்தன; நா "கோவிந்தா!" என்றது. நீள் கரங்கள்போல் நிலப் பரப்பங்கலும் எட்டிப் பற்றும் வைகறை ஒளிக் கற்றைகளிலே ஒரு மைல் தொலைவில் கண்டேன், துவாரகையின் மாடங்களை. "சூட்டுயர் மணிமாடங்கள் சூழ்ந்து தோன்றும் துவராபதிக்கு (எ)ன்னை உய்த்திடுமின்" என்று வேண்டினாள் ஆண்டாள். அவள் காண விழைந்த அப்பெரும் பதியை நான் கண்ணாரக் காணப்போகிறேன் என்ற அளவிலா மகிழ்ச்சி எனக்கு. கால்கள் விரைந்தன; வானோங்கும் மாளிகைகளின் இடையே தேடின கண்கள், கண்ணன் கோயிலை. வழிச் செல்லும் பக்தர், "அதோ அவன் கோயில்! அதோ! அதோ!" என்று சொல்லக் கேட்டு மகிழ்ந்தன என் செவிகள்.

துவாரகாபுரி கட்டுங் காவலுமாக இருந்தது என்று நூல்கள் கூறும். இப்போதும் நாம் எளிதில் உள்ளே செல்வதற்கில்லை. நகரக் கண்காணிப்புக் குழுவினர், யாத்ரிகர்கள் நகரில் நுழையும் போது ஒவ்வொருவரிடமும் கால் ரூபாய் வரி வாங்கிவிடுகின்றனர். இதற்காகச் சாலைகள் யாவும் அடைக்கப்பெற்றுள்ளன.

துவாரகை பெரிய பட்டினம்; கோமதி நதி கடலிற் கலக்குமிடத்தில் அந்த நதியின் கரையில் அமைந்துள்ளது. இந்த நகரத்தின் வரலாறு ஸ்ரீபாகவதம், விஷ்ணுபுராணம், பாரதம் முதலிய நூல்களிலே விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. கண்ணபிரான் கம்ஸனைக் கொன்றதைக் கேட்டு மனம்புழுங்கிய ஜராஸந்

தன் மதுரைமீது பதினெட்டு முறை படையெடுத்தான். ஒவ்வொரு தரமும் யாதவ வீரர்கள் நன்கு போர் புரிந்து நகரத்தைக் காப்பாற்றிவந்தனர். காலயவனன் என்ற வீரன், தன் புயபலத்தால் இறுமாந்து, தன்னுடன் போர் புரியவல்லவன் எவன் என்று அங்கு மிங்கும் நாடினன். நாரதர் யாதவ வீரர்களைக் காட்டிவிட்டார். அநேக ஆயிரங் கோடி மிலேச்ச வீரர்களுடனும், ரதங்கள், துரங்கங்கள், மதக்களிறுகள்—இவற்றுடனும் மதுரையை முற்றுகையிட்டான் காலயவனன். இரு பெரும் பகைவர்களால் நகரம் பாழ்படும் என்று நினைந்து கண்ணபிரான், கடலில் 12 யோஜனை நீளமுள்ள நகரம் ஒன்றைத் தனக்காக நிருமித்துக் கொடுக்கும்படி வருணபகவானை வேண்டிக்கொண்டான். இது தான் "துவாரகை" எனப் பெயர்பெற்றது. கிருஷ்ணன் தனது மாயையால் மதுரையிலுள்ளோர் யாவரையும் துவாரகையில் சேர்த்துப் பின்பு தான் ஒருவனாகவே வெறுங்கையுடன் வெளியே வந்தான். இவனைக் கண்ட காலயவனன், இவனைப் பின் தொடர்ந்து, ஒரு குகையில் தூங்கிக்கொண்டிருந்த முசுகுந்தன் என்பவனது நோக்கால் சாம்பலாயினன். பின்பு கண்ணன் துவாரகைக்குச் சென்று

"பதினாறு மாயிரவர் தேவிமார் பணிசெய்யத்
துவரை யென்னும்
(அ)தில் நாயகராகி வீற்றிருந்த...."

என்றவாறு தேவிமார் பலரும், கேளுங் கிளையும் சுற்றமும் சூழ அரசு செலுத்தி வந்தான். பின்பு தன்னுடைய தாமமாகிய ஸ்ரீவைகுண்டத்திற்கு எழுந்தருளும்போது, அந்த நகரம் முழுதும் கடலில் ஆழுமென்று கூறி மக்கள் யாவரையும் வெளிப்படுத்தினன். கண்ணன் எழுந்தருளியிருந்த திருமாளிகை நீங்கலாக மற்ற இடம் முழுதும் கடல் கொண்டது என்று கருதுகின்றனர் பெரியோர்.

துவாரகை, முக்திதரும் நகரங்கள் ஏழனுள் ஒன்றாகும். "துவாரகாபுரி" என்பது தமிழில் குறுக்கம் பெற்றுத் "துவரை" என்று வழங்கப்படுகின்றது. இது பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்—இவர்களது மங்களாசாஸநம் பெற்றது. இங்கு யாத்ரிகர்கள் தங்குவதற்கு தர்மசாலைகள் பல உள்ளன. ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்குப்போகும்வழியில் நடுவில் வானமாமலை மடம் ஒன்று இருக்கிறது; நகரத்திற்குள்ளே தமிழ் நாட்டினர் தங்குவதற்கு இன்னும் ஒன்றிரண்டு விடுதிகள் இருக்கும். நாங்கள் தங்கியிருந்த தர்மசாலை கடற்கரையின் அருகிலுள்ளது; அங்கிருந்து கோயிலும் கோமதி நதிக்கரையும் இரண்டு பர்லாங்க் தொலைவிலேயே உள்ளன.

அன்று அமாவாசை. நாங்கள் யாவரும் கோமதி நதியில் முறைப்படி நீராடிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஆலயத்திற்குள் சென்றோம். கோமதியாறு மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலிற் சேருகின்றது. இதன் வட கரையில் உள்ளது ஆலயம். ஸ்நான கட்டத்திலிருந்து சுமார் 40 படிகள் ஏறித் தெற்கு வாசலை அடைகிறோம். நாங்கள் யாவரும் சிறிது பரபரப்புடன் நேரே

கண்ணபிரானுடைய ஸந்நிதிக்குச் சென்றோம். அப்போது தான் திருமஞ்சனம் முடிந்து, திருவாபரணங்களைச் சாத்திக் கொண்டிருந்தார் பூஜகர். பக்தர்கள் கூட்டங் கூட்டமாகப் பெருமானின் புகழைப் பாடிக்கொண்டு எதிரே நின்றனர். நானுங் கண்டேன், ஊனக் கண்ணால் காணக்கூடாத மூர்த்தியை.

மேலை வானோர் சூழ்ந்தேத்தும்
மானேர் விழியாள் நாயகனைப்
பாலில் அரவில் துயின்றானைப்
பரனை மதுரை மேயானை
நீலக் கடலின் வெண்டிரைகள்
நாளும் ஆர்த்துப் புகழ்பாடும்
மேலைத் துவரா பதியில்நான்
மேவிக் கண்டு களித்தேனே.
நெறியால் அருளால் பெறலாகும்
நேமிப் படையான் அந்தணனை
உறியார் வெண்ணெய் மிகமேவி
உரலோ டார்ந்த கருமணியை
வெறியார் மலர்கொள் நெடுந்தருக்கள்
மதுவைப் பொழிய அளருகும்
புறவார் துவரா பதியில்நான்
பொன்னைக் கண்டு களித்தேனே.


மூர்த்தியை ரஞ்சோத்ராய்—போர் கொண்ட மன்னன்—என்றழைக்கின்றனர். எனினும் பெருமானின் திருவுருவம், "கண்டவர் தம் மனம் வழங்கும்" என்ற கணக்கிலே, கண்டவர்களது மனதை எளிதில் கவரக்கூடிய பேரெழில் வாய்ந்தது. மூர்த்தி மூன்றடி உயரங்கூட இல்லை. அருள் சுரப்பதற்குப்போல் நன்கு மலர்ந்த நயனங்களும், பேசுவதற்குப்போல் சுழித்த உதடுகள் கொண்ட திருப்பவளமும், சேய் தன் பசி தீர நாடும் தாயின் ஸ்தனங்கள்போல், அறிவால் மிக்க அடியார்கள் தமது இருவினைகளும் தீரத் தேடிக் கண்டு களிக்கும் இணையடிகளும், "சங்க-சக்ர-கதாபாணே! த்வாரகா-நிலய! அச்சுத!" என்று திரௌபதி கூவியவாறே ஒரு கையிலே உயர்த்திய கதையும், வேறொன்றில் ஏந்திய ஆழியும், வேறொன்றில் பிடித்த வெண்சங்கும், நான்காவது திருக்கையால் குறிக்கும் அபயமும், "ராஜாதி ராஜஸ் ஸர்வேஷாம்" என்றவாறு பாராளும் பெரு மன்னர்க்கெல்லாம் மன்னனாகிய தன் நிலையைக் காட்ட அணிந்துள்ள கால்சட்டையும், வீரக்கழலும், அங்கியும், "மற்றும் பல்கலன்" என்பதற்கிணங்கத் திருமேனி முழுதும் அணிந்துள்ள பலவகைப்பட்ட ஆபரணங்களும், "கேசவன்" என்ற திருநாமத்தை மெய்ப்பிப்பதுபோல், பின்னியிட்டு முன்னே இடது திருவடிவரையில் தாழும் கருங்குழலும், திருநுதலில் அணிந்த கோபிசந்தனமும், தலையில் அணிந்த மணிமுடியும், மயில் தழைப்பீலியும்— இவைபோன்ற ஒவ்வொன்றுங் கண்டு களித்த நாங்கள் எத்தவம் செய்தோமோ என்பதுதான் இன்னும் தோன்றவில்லை. "கும்பிடு நட்டமிட்டு ஆ)டிப் பாடி" என்றவாறு,அங்குக் கூடியுள்ள அடியார்கள் ஒரு

மனதுடன்—ஆடவர் பெண்டிர், சிறியோர் பெரியோர், அறிஞர் பேதை, வறிஞர் செல்வர் என்ற வித்தியாச மில்லாமல்—"பரஸ்பர நீசபாவை:" என்ற கணக்கிலே, "பெருமானின் முன்னிலையிலே நான் மிகத் தாழ்ந்தவன்" என்ற மனப்பான்மையிலே "கோவிந்தா! கோவிந்தா!" என்று ஆடிப் பாடிக் களித்தது, பெருமானின் காட்சியைவிடப் பன்மடங்கு ஊக்கியது. எங்களிற் சிலர் தமிழ்ப் பாட்டுக்கள் பாடினோம்; சிலர் அடியார்களது ஈரச் சொற்களை அநுஸந்தித்தோம்: சிலர் வடமொழித் தோத்திரங்கள் சொன்னோம்; அந்நாட்டினர் குஜராத்தியில் பாடினர். சிறிது நேரத்திற்கெல்லாம் பஜனை கோஷ்டியினர், "ஹரே ராம, ஹரே ராம, ராம, ராம, ஹரே ஹரே; ஹரே க்ருஷ்ண, ஹரே க்ருஷ்ண, க்ருஷ்ண, க்ருஷ்ண ஹரே ஹரே" என்று பாடினர். அங்குள்ள யாவரும் ஒருங்கே இவற்றையே பாடினோம். இறைவனது நாமத்தின் மஹிமைதான் என்ன? இது எங்களுக்குள் இருந்த வேற்றுமையை நொடிப் பொழுதில் அகற்றிவிட்டது. பேரானந்தத்தில் மூழ்கிய எங்களது கோஷம், "உத்காயதிநாம் அரவிந்தலோசநம்... திவம் (அ)ச்ப்ருசத் த்வநி:" (கண்ணனுடைய தாமரைக் கண்ணின் அழகுக்குத் தோற்றுப் பாடும் கோபிகைகளுடைய சப்தம், வானை எட்டியது) என்பதுபோல், வானைப் பிளந்தது.

கண்ணபிரானது ஸந்நிதியில் வெகுநேரம் தங்கிவிட்டுப் பின்னர் பிராகாரத்தில் பிரதட்சிணமாகச் சென்றோம். கண்ணனது ஸந்நிதிக்கு எதிரில் ஸ்ரீகல்யாண்ஜீ, ஸ்ரீத்ரிவிக்ரம்ஜீ—இவர்களது ஸந்நிதிகள் உள்ளன. அருகிலுள்ள கட்டு ஒன்றில் எட்டுப் பெரிய அறைகளில் ஸ்ரீஜாம்பவதி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீஸத்யபாமா, ஸ்ரீதேவகி முதலியோர் உள்ளனர். பிராகாரத்தில் ஸ்ரீவேணீமாதர் ஸந்நிதி, ஸ்ரீராதாக்ருஷ்ணன் ஸந்நிதி முதலிய வேறு பல ஸந்நிதிகள் உள்ளன. இவற்றுள் முறைப்படி வணங்கிவிட்டு வடக்கு வாசல் வழியே நாங்கள் தங்கு மிடத்திற்குச் சென்றோம்.

பிற்பகல் 3 மணிக்குப் பிறகு நகரைச் சுற்றிப்பார்த்தோம். நகரத்தில் பல இடங்களில் சிறு கோயில்களும் புண்ணிய தீர்த்தங்களும் இருக்கின்றன. கடற்கரை மிகச் சிறிது. பெரிய அலைகள் சீற்றத்துடன் கரையிலுள்ள சிறு குன்றுகளைத் தாக்கியவண்ண மிருந்தன.

எங்களிற் சிலர் பேட் த்வாரகைக்குச் சென்று வந்தனர். "பேட்" என்பது "தீவு" எனப் பொருள்படும். இந்தத் தலம் ஒக்கா என்ற துறைமுகப்பட்டினத்திலிருந்து 3 மைல் தொலைவில் கடலில் உள்ளது. ஒக்கா என்ற இடத்திற்கு ரெயில் வண்டியிலும் மோட்டர் பஸ்ஸிலும் பிரயாணம் செய்யலாம்; இது துவாரகை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 19 மைல் தொலைவிலுள்ளது. பேட் துவாரகைக்குப் போகும் யாத்ரிகர்கள் இரவு 7 மணிக்குள் ஒக்காவுக்குத் திரும்பவேண்டும்; இல்லாவிடில் இரவு கோயிலிலேயே தங்கவேண்டும். படகில் போய்வருவதற்குச் சத்தம் மிகவும் குறைவு. பேட் த்வாரகையும் பெரிய பட்டினம். இதில் கோயில்கொண்டுள்ள கண்ணபிரான், த்வாரகையில் போலவே காட்சியளிக்கின்றார்.



பேட்-த்வாரகையில் கோயில்கொண்ட கொற்றவன்



த்வாரகையில் கோயில்கொண்டுள்ள கோவலன்

அஸ்தமித்ததும் நாங்கள் மறுபடியும் கண்ணபிரானைக் கைதொழச் சென்றோம். அப்போது பூஜை முடிந்து, சயன அவஸரம் நிகழ்ந்தது. பெருமான் மெல்லிய பட்டால் முக்காடு அணிந்திருந்தான்; இரண்டு பக்கங்களிலும் வெள்ளிப் பசுக்கள், கன்றுகள் அமைந்திருந்தன. மூர்த்தியை ஸேவித்ததும் "திவத்திலும் பசுநிரை மேய்ப்பு (உ)வத்தி" (ஸ்ரீவைகுண்டத்தைக் காட்டிலும் பசுக்கணங்களை மேய்ப்பதை மிகவும் விரும்புவாய்) என்பதும், "கன்றுபேய்த்து (இ)னிதுகந்த காளாய்!" (பசு மேய்த்து உகந்தாய், கன்று மேய்த்து இனிது உகந்தாய்) என்பதும், இதன் தேறிய பொருளாய்த் "தம்மைக் காத்துக்கொள்ள சக்தியற்றவர்களிடம் கருணை காட்டிக் களிப்பான் இறைவன்" என்பதும் உள்ளத்தில் குமிழ்த்தெழுந்தன. நீர்மல்கு கண்ணினரான பக்தர்கள் கோஷ்டி கோஷ்டியாக வந்து, பரமனைக் கண்டு ஆடிப்பாடிக் களித்ததும் எங்கள் யாவரையும் பரவசமாக்கியது. அங்குச் சிறிது காலம் தங்கி, இறைவனை வழிபட்டுப் பின்பு விடுதிக்குச் சென்றோம். இரவு 10 மணிக்கு மேல் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று எங்களது ரயில் பெட்டியில் துயில்கொண்டோம்.

இனவேழ் விடையும் கதமா களிறும்
எளிதே யவியத் தடிவா னமருள்

# ஹிந்து சட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B.A., M.L.
(Retd. Dist. Judge.)

ஹிந்துக்களில் விவாகங்களைப் பற்றிய சட்ட மாறுதல்கள் சென்ற இதழ்களில் வெளிவந்த வியாசங்களில் விளக்கப்பட்டன. இவ்வியாசத்தில் நமது ஹிந்து சமூகத்தில் பல நூற்றுண்டுகளாக எல்லோராலும் ஆதரிக்கப்பட்டுவருகின்ற தத்து ஸ்வீகாரத்தைப் பற்றியும் அதில் இந்திய பார்லியமெண்டார் செய்த மாறுதல்களையும் கவனிப்போம். தத்து ஸ்வீகாரமென்றால் ஒருவன் தனக்கு புருஷ பிரஜை பிறக்காவிட்டால் ஒரு அசல் பிள்ளையை தன் பிள்ளையாக வளர்த்துகொள்வது. மனு முதலிய நீதி ஸ்மிருதிகளில் தத்து ஸ்வீகாரத்தின் கருத்து (1) பித்ருக்களுக்கு பிண்டோதக கிரியைகள் விச்சிந்நமில்லாமல் நடைபெற வேண்டுமென்றும், (2) தன் கோத்ர நாம ஸங்கிர்த்தனமும் நிரந்தரம் நடைபெற வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் இது வைதீக முறையில் செய்யப்படும் ஆத்மார்த்தமான கர்மா. ஆதலால் ஒருவன் ஒரு பிள்ளையைத் தான் வளர்த்துக் கொள்ளலாம்; பெண்ணைக் கூடாது. பெண் தன் பித்ருக்களுக்கு ச்ரார்த்தாதிகள் செய்ய அதிகாரியல்ல; தன் பிதாவினுடைய பெயரையும் கோத்திரத்தையும் விருத்தி செய்கிறவளும் அல்ல. பெண்ணுக்கு விவாகமானவுடன் அவள் வேறு கோத்திரத்தை அடைந்து விடுவாளன்றோ! மேற்படி கருத்துகளைக் கொண்டு புத்ர ஹீனனான புருஷன்தான் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். அதற்கு அவன் பத்னி ஸம்மதிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. புருஷன் தன் பத்தினிக்கு அதிகாரம் கொடுத்திருந்தால் அவன் இறந்த பிறகு அவள் அவனுடைய ஆத்ம நன்மைக்காக அவனுக்கென்று ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். அவன் தன் பத்தினிக்கு அதிகாரம் கொடுக்காமல் இறந்தால், அவனுடைய ஞாதிகளின் அனுமதி பெற்றுத் தான் அவள் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம்.

நமது டில்லி பார்லிமெண்டார் 1956 வருஷத்தில் நெ. 78 சட்டம் செய்தார்கள். அது 21-12-1956 லிருந்து அமுலிலிருக்கிறது. அது நம் நாட்டிலுள்ள ஸகல ஹிந்துக்களுக்கும் வர்த்திக்கும். அதன் முக்கியமான அம்சங்கள் வருமாறு.

புத்ர ஹீனனான ஒருவன் ஒரு பிள்ளையையாவது, பெண்ணையாவது ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். (புத்ர ஹீனனென்றால்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சினமா பொருநர்ச் சிரமீ துருள
விசயன் தேரூர் பெருமான் மருவூர்
புனமா மயிலின் ஒளிசேர் தழையும்
பொழிலார் மலரும் திரையோ டலையும்
புனல்கோ மதிசேர் ஒருமா கடலின்
கரைசேர் புகரார் துவரா புரியே.

பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ளும் விஷயத்தில் புத்ரன், பௌத்ரன், பிரபௌத்திரன்மாயாரும் இல்லாதவனென்று பொருள். பெண்ணை ஸ்வீகாரம் செய்துகொள்ளும் விஷயத்தில் அவனுக்கு பெண்ணாவது அவன் பிள்ளையின் பெண்ணாவது இல்லாதவன் ஸ்வீகாரம் செய்துகொள்ளும் விஷயத்தில் தன் பத்னி அல்லது பத்னிமார் சம்மதிக்கவேண்டும். புருஷனிழந்த ஸ்திரீயும் தன் இறந்த புருஷனின் அனுமதியின்றிப் பிள்ளையையோ, பெண்ணையோ ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். புருஷனுயிருடனிருக்கும்பொழுது அவள் தானகவே ஸ்வீகாரம் செய்து கொள்ள முடியாது. விவாகமாகாத புருஷன் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். அவிவாகிதை ஸ்திரீயும் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். ஸ்வீகாரம் செய்துகொள்பவர், புருஷனே, ஸ்திரீயோ, தகுந்த நிலைமையில் இருக்கவேண்டும்: அதாவது (1) மேஜராக இருக்கவேண்டும். (2) ஸ்வபுத்தியுடனிருக்கவேண்டும்; (3) புருஷன் பெண்ணை ஸ்வீகாரம் செய்துகொண்டால் அந்தப் பெண் அவனைக் காட்டிலும் அதமபக்ஷம் 21 வருஷம் சிறியவளாக இருக்கவேண்டும். ஸ்திரீ ஒரு பிள்ளையை ஸ்வீகாரமெடுத்தால் அவள் அவனைவிட 21 வருஷமாவது பெரியவளாக இருக்க வேண்டும்.

ஸ்வீகாரம் செய்யப்படும் பிள்ளை அல்லது பெண் (1) ஹிந்துவாகத்தானிருக்கவேண்டும். (2) ஏற்கெனவே மற்றொருவரால் ஸ்வீகாரம் செய்யப்பட்டிருக்கக்கூடாது. (3) விவாகமாகாமலிருக்க வேண்டும். (4) 15 வயதுக்குள் இருக்கவேண்டும். விவாகமாகியிருந்தும் ஸ்வீகாரமெடுத்துகொள்ளும் ஜாதி வழக்கமிருந்தால், 15 வயது மேல்பட்டிருந்தாலும் ஸ்வீகாரம் செய்துகொள்ளும் ஜாதி வழக்கமிருந்தால் ஷை (3), (4) நிபந்தனைகள் அன்வயிப்பதில்லை.

பிள்ளையையோ பெண்ணையோ ஸ்வீகாரமாகக் கொடுப்பதற்கு தாய் தந்தைகளுக்கும், சில சந்தர்ப்பங்களில் அவர்களல்லாத சம்ரக்ஷண கர்த்தா (Guardian) வுக்கும் அதிகாரமுண்டு. தகப்பன் தன் பிள்ளை அல்லது பெண்ணை தன் மனைவி யிருந்தால் அவள் சம்மதமில்லாமல் கொடுக்கக்கூடாது. புருஷனிருக்கும் போது, அவள் மனைவி தங்கள் பிள்ளையையாவது, பெண்ணையாவது ஸ்வீகாரமாகக் கொடுக்கக்கூடாது. புருஷனிறந்த பின் அவள் கொடுக்கலாம். தாய் தந்தைகளை இழந்த ஒரு பெண்ணை, அல்லது பிள்ளையை, அவர்களின் சம்ரக்ஷண கர்த்தா கோர்ட்டாரின் அனுமதி பெற்று ஸ்வீகாரமாகக் கொடுக்கலாம். அப்படி ஸ்வீகாரமாகக் கொடுப்பது பிள்ளைக்கோ பெண்ணுக்கோ லாபகரமாக இருக்குமென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால்தான் ஸ்வீகாரத்திற்கு அனுமதிக்கலாம்.

இந்த சட்டத்தின் நிபந்தனைகளை அனுசரித்து நடக்கும் ஸ்வீகாரம்தான் சட்டப்படிச் செல்லும். அவைகளை உல்லங்கித்து செய்யும் ஸ்வீகாரம் செல்லாது. அது ஸ்வீகாரமே அல்ல. அந்தப் பிள்ளைக்கோ பெண்ணுக்கோ தான் பிறந்த குடும்பத்தில் சட்டப்படி தனக்குள்ள உரிமைகளெல்லாம் இருக்கும். சரியாக செய்யப்பட்ட ஸ்வீகாரத்தில், அப்பிள்ளை அல்லது பெண், தான்

123209

பிறந்த குடும்பத்தின் சொத்திற்கு பாத்யம் முற்றிலும் இழந்து, புகுந்த குடும்பத்தில் சொத்து பாத்யம் அடைவர். ஆனால் விவாக விஷயத்தில் ஸ்வீகாரப்பிள்ளை, அல்லது பெண், இரண்டு குடும்பங்களிலும் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாத நிஷேத முறைகளை அநுசரிக்க வேண்டும். ஸ்விகாரத்திற்கு முன் பிறந்த குடும்பத்தில் தனக்கு சொத்து உரிமை ஏதாவது ஏற்பட்டிருந்தால் அது போகாது. ஸ்விகாரமாகப் புகுந்த குடும்பத்தில் ஸ்வீகாரத்திற்கு முன் அந்த குடும்ப சொத்தேதாவது வேறொருவர் வார்சு கிரமத்திலடைந்திருந்தால், அதை ஸ்வீகாரப் பிள்ளையோ, பெண்ணோ தொடர அதிகாரமில்லை. தாய் தந்தைகள் ஸ்விகாரம் செய்துகொண்ட பிறகும் தங்கள் சொந்த சொத்தை தங்களிஷ்டப்படி விநியோகம் செய்து கொள்ளலாம். ஒருதரம் ஸ்வீகாரம் செய்துகொண்டால் அதை மாற்றவோ, ரத்து செய்யவோ முடியாது. பெண்ணையோ, பிள்ளையையோ ஸ்வீகாரமாகக் கொடுக்க தகுதியுள்ளவர் கொடுத்து வாங்கிக்கொள்பவர் ஸ்வீகரித்தால், அதுதான் ஸ்விகாரபூர்த்தி. அதற்கு தத்தஹோமம் முதலிய சடங்குகள் தேவையில்லை. ஸ்வீகாரமெடுத்துக்கொண்டதாக ஒரு ரிஜிஷ்டர் தஸ்தாவேஜி பிறந்தால் அதுவே கோர்ட்டுகளில் ஸ்வீகாரத்திற்குப் போதுமான சாக்ஷயமாகும். ஒருவன் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும்போது அவனுடைய பத்னி ஸ்வீகாரமான பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ தாயாவாள். அந்த காலத்தில் அவனுக்குப் பல மனைவிமாரிருந்தால், அவர்களில் முதலாக வந்தவள் (ஜ்யேஷ்ட பத்னி) தாயாவாள். மற்றவர்கள் மாற்றும் தாய்மாராவார்கள். தாயின சொத்துக்களும், மாற்றும்தாயின் சொத்துக்களும் அவர்களின் காலாநந்தரம் அடையும் வார்சுகள் வெவ்வேருக இருப்பதனல், இந்த விஷயம், சட்டத்தில் நிரூபிக்கப்பட்டது. இதுவரையிலுள்ள பல விவகாரங்களின் காரணத்தை தொலைத்து விட்டதாகவும் ஆயிற்று.

ஸ்வீகாரமாக வந்த பிள்ளையும், பெண்ணும் அந்தக் குடும்பத்திலேயே பிறந்திருந்தால் சொத்திலென்ன உரிமைகளடைவார்களோ அவ்வுரிமைகளை அடைவார்கள்.

ஸ்வீகாரமாக கொடுக்கவோ, வாங்கவோ, பணம் கொடுத்தாலும் பெற்றுக்கொண்டாலும் அது சட்டத்தின் 17-வது பிரிவின்படி குற்றமாகும்.

---



சிறுவன் :—அப்பா... அப்பா... மாமா ஆத்து கல்யாணம் நின்னே போயிட்தாம்.

தந்தை:—என்னடா உளர்ரே.

சிறுமி :—பின்னே என்னப்பா. மாப்பிள்ளைக்கு கூட இன்ப்ளுஇன்ஸாவாம். இன்னும் பத்து நாள் கழிச்சிதானம்.

தந்தை :—அப்பிமடு......லீவு கேன்ஸல் பண்ணவேண்டியது தான்.

# காளிதாஸர் கனவு

## 10, ஊர்வசி : ஸௌந்தர்ய தேவதை.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

### இந்திர சபையில் ஸரஸ்வதி ஊர்வசியை அடைதல்.

இந்திர சபையில் சரஸ்வதி தேவி இயற்றிய இலக்குமி சுயம்வரம் என்ற நாடகம் நடிக்கப்பட்ட பொழுது இலக்குமி வேஷத்தைத் தரித்தஊர்வசியை "உனக்கு யாரிடத்தில் காதல்?" என்றுகேள்வி கேட்கப்பட்ட பொழுது அவள் "புருஷோத்தமன்;' என்று கூறுவதற்குப் பதிலாக "புரூரவனிடத்தில்" என்று கூறினாள். சபையோர் எல்லோரும் நகைத்தார்கள். இந்திரன் அவளுடைய மனத்தின் நிலையை அறிந்து தன்னுடைய தோழனுகவும் அரசர் திலகனுகவுமிருந்து புரூரவன் என்றும் விக்கிரமன் என்றும் புகழ்பெற்ற அரசனிடம் வாழ்ந்து அவனுக்கு மகன் பிறந்து அவன் தன் மகனைக்கண்டவுடன் திரும்பி தேவசபைக்கு வரும்படி அவளுக்குக் கட்டளையிட்டான். இது தேவ ரகசியம்.

ஒரு நாள் புரூரவனுடைய பட்டமகிஷி ஔசினரிதேவி அரசனுக்கு ஊர்வசியிடம் உள்ள அளவற்ற காதலை யறிந்து சந்திரனையும் ரோகிணீ தேவியையும் ஒரு விரதத்தால் தான் ஆராதனஞ் செய்து அவர்களுடைய அருளைப் பெற்றால் அரசனுடைய விருப்பம் நிறைவேறும் என்று கூறி அந்த விரதத்தை அரண்மனை தோட்டத்தில் அனுஷ்டித்தாள். அவள் அங்கே இருக்கும் பொழுதே ஊர்வசியும் சித்திரலேகையும் ஆகாய மார்க்கமாக அங்கே மந்திர பலத்தால் தங்களை மறைத்துக்கொண்டு யாவரும் காணுதபடி வந்தார்கள்.

ஊர்வசி கருத்த உடையை அணிந்து முத்துக்களாலும் நவரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டு தெய்வீக அழகுடன் வந்தாள். அரசி விரதத்தை முடித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போனபிறகு அரசன் ஊர்வசி நினைவாகவே யிருந்து வருந்தினன். "பூம்படுகையும், திங்களின் ஒளியும், சந்தனக் குழம்பும், ஆபரணங்களும் எனக்கு இன்பத்தை அளிக்கவில்லை. அவளுடைய கால் சிலம்புகளின் ஒலியாவது என் காதில் விழுமா? அவள் என் பின்வந்து அவளுடைய தளிர்க் கரங்களால் என் கண்களைப் பொத்தி இன்பத்தை அளிப்பாளா? இந்தத் தோட்ட மாளிகையில் வானவீதி வழியாக வந்திறங்கி காணத்தால் தயங்கினும் தோழியால் அடிமேலடியாக

என்னிடம் அழைத்து வரப்படுவாளா?" என்று அரசன் விதூஷகனிடம் உரைத்தான்.

கூடம் நூபுரசப்த மாத்ரமபிமே
காந்தம் ச்ருதௌ பாதயேத்
பச்சாதேத்ய கராத்பல ப்ருதே
குர்வீ தவா லோசனே |
ஹர்ம்யேஸ்மின் ஸாத்வனவசான்
மந்தாய மாறு பலாத்
ஆனீயேத பதாத்பதம் சதுரயா
ஸக்யா மமோபாந்திகம் ||

அச்சமயத்தில் ஊர்வசி பின்புறமாக வந்து அவனுடைய கைகளைத்தன் கைகளால் மூடவே அரசன் களித்து அவளுடைய கைகள்தான் அவ்வளவு இன்பத்தை அளிக்குமென்றறிந்து அவளுடைய கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவள் நேரிடையாக தர்சனங் கொடுக்கவே "உலகத்தை ஒரு குடையின் கீழ் ஆண்டு பலவரசர்கள் வணங்க அவரது முடிகளால் சிறப்பாக விளங்கும் சிங்காசனத்தில் நான் அமர்ந்திருந்தும் இவளுடைய அன்பை மிகப் பெரியதாக நினைத்து அவளுடைய பணியாளாக இருப்பதை சக்கரவர்த்தி நிலையைவிட மிக உயர்ந்ததாக நான் கருதுகின்றேன். அவள் என்னருகில் இல்லாத பொழுது துன்பத்தையே கொடுத்த சந்திர கிரணங்கள், மன்மத பாணங்கள் முதலிய இன்பப் பொருள்கள் இவள் என்னையடைந்தபின் இன்பத்தையே அளிக்கின்றன. காணமற் போய்க் கண்ட இன்பம் அதிக சுகத்திற்குக் காரணமன்றோ? வெய்யிலில் வருந்தினவனுக்கன்றோ நிழலின் அருமை தெரியும்" என்று அளவற்ற ஆனந்தத்துடன் மொழிந்தான்.

ஸாமந்த மௌளி மணிரஞ்சித பாதபீட
மேகாத பத்ரம வனேர்ந ததாப்ரபுத்வம் |
அஸ்யாஸ்ஸகே சரணயோர ஹமத்ய காந்த
மாஞ்ஞா கரத்வமதிகம்ய யதா கிரிதார்த்த: ||
பாதாஸ்த ஏவசசினஸ் ஸுகயந்தி காத்ரம்
பாணாஸ்த ஏவ மதனஸ்ய மனோனுகூலா: ||
ஸம்ரம்ப ரூக்ஷமிவ ஸுந்தரியத்யதா ஸீத
த்வத் ஸங்கமேன தத்ததிவகனு மீதம் ||
யதேவோபனதம் துக்காத்
ஸுகம் தத் ரஸவத்தரம் |
நிர்வாணய தருச்சாயா
தப்தஸ்ய ஹி விசேஷத: ||

அவர்கள் வெகுகாலம் தம்பதிகளாக ரமித்துச் சுகித்தார்கள்.

### ஊர்வசியைப் பிரிதல்.

ஒரு நாள் ஊர்வசி பெண்கள் போகத்தகாத குமார வனம் என்ற கானகஞ் சென்றாள். உடனே அங்கே

அவள் ஒரு கொடியாக மாறிவிட்டாள். அவளுடைய பிரிவாற்றாமையால் அரசன் அந்தக் காட்டில் அவளைத் தேடித் தேடித் திரிந்து ஓய்ந்து வருந்திப் பித்துப்பிடித்தவன்போல் புலம்பலாயினான். மழை முகிலைக் கண்டு "அடே! அரக்கா! நில்! நில்! என் காதலியை எங்கே தூக்கிக்கொண்டு போகிறாய்" என்று அரற்றினான். பிறகு தெளிந்து "இது நீருண்ட முகிலல்லவா? இது வான வில்லல்லவா? இது மழை, அம்பு மழையல்ல, இது மின்னல் ஊர்வசியல்ல" என்று கூறினான்.

மறுபடியும் பிரமித்து புல் தலத்தை ஊர்வசியின் ரவிக்கை யென்று நினைத்து எடுக்கப் போனான். பிறகு மயிலைப் பார்த்து "நீ ஊர்வசியைக் கண்டாயா?" என்றான். அது மறுமொழி கூறாமல் சென்றது. அரசன் "இதின் தோகை என் ஊர்வசி மறைந்ததால் ஒப்பற்ற அழகுடன் இருக்கின்றதென்று இந்த மயிலுக்குக் கர்வம். என் ஊர்வசி மலரணிந்த அழகிய கூந்தலுடன் இங்கே வந்தால் இந்தத் தோகை அதற்கு நிகராகுமா?" என்றான். பிறகுக் குயிலைப் பார்த்து "ஊர்வசியைக் கண்டாயா?" என்று வினவினான். அது மறுமொழி கூறாமல் பறந்து போயிற்று. அப்படியே அன்னப் பறவையைக் கேட்டான். அது மறுமொழிகூறாமல் மானஸ ஸரஸ்ஸுக்குப் பறந்துபோயிற்று. பிறகு அப்படியே வண்டைப் பார்த்துக் கேட்டான். அதுவும் மறுமொழி கூறவில்லை. "இது என் ஊர்வசியின் சுந்தர முகத்தைக் கண்டிருந்தால் இப்படித் தாமரைப்பூவில் மோகங் கொள்ளுமா?" என்றான். மலையைப் பார்த்து அப்படியே கேட்டான். அந்த மலையின் குகையிலிருந்து எதிரொலி வரவே அது மறுமொழி கூறியதாக பிரமித்தான். பிறகு ஏமாற்றம் தெளிந்தது. மறுபடியும் பிரமையடைந்து ஆற்றைப் பார்த்து "என் ஊர்வசியின் புருவங்களை சிறு அலைகளாக மாற்றி ஒட்டியாணத்தை பறவைக் கூட்டமாக மாற்றி உடையை நுரையாக மாற்றி நடையை நீரோட்டமாக மாற்றி தன்னையே ஆறாக மாற்றிவிட்டான்.

தரங்கப் ரூபங்கா க்ஷுபித விஹக ச்ரேணி ரசனு
விகர்ஷந்தி பேனம் வஸனமிவ ஸம்ரம்பசிதிலம் |
யதா கேலம்யாந்தீ ஸ்கலித மபிஸந்தாய யஹுசோ
த்ருவம் நதீரூபேணேயம் த்ருவமஸஹ மானுப்ரிணதா.

"நதியே உருவமான ஊர்வசி! என் தவறுகளை மன்னித்து என்னிடம் வா" என்றான். பதிலொன்றுமில்லை. உடனே "இது ஆறுதான். ஊர்வசி என்னை விட்டுவிட்டு கடலிடம் போகமாட்டாள்" என்றான். பிறகு மானைக் கேட்டான் அதுவும் மறுமொழி கூறாததால் ஏமாற்றத்தையும் துன்பத்தையு மடைந்தான். (தொடரும்)

# நக்ஷத்ர மண்டலம்

## பத்மினி

கதிரவனை தேடவே த்தேவை இல்லை. அவனை அறிமுகப் படுத்துவதற்கு ஆளும் அனுவசியம்! கல்யாணி ஆஸ்பத்திரி இருக்கும் சாலையில் திரும்பும் பொழுதே, அவ்வழியாக செல்லும் வாகனங்களிலுள்ள பிரயாணிகள், (இரு) கால் நடைகள், சிரம் தாழ்த்தி, கழுத்தை சாய்த்து, சிரத்தையுடன்கவனிப்பதைப் பார்த்தால், நமது பத்மினி அவர்களின் இல்லம் அங்கு இருக்கின்றது என்பது தெளிவாகிவிடும். சொந்த நாட்டில் சம்பாதித்திருக்கும் புகழ் நிறைந்து, வெளி நாடுகளிலும் வெற்றிக் கொடி நாட்ட முயலும் நமது தென்னாட்டு கதா நாயகியின் வீட்டின்வழியாகப்போகிறோம் என்ற நினைப்பிலேயே பெருமிதம் கொண்டு அவ்வழியாகச் செல்லும் பஸ்கள்கூட துள்ள ஆரம்பித்து விடுகின்றன. (ஆனால் மானைப் போன்று அல்ல. சென்னையிலுள்ள அன்பர்களுக்கு நம் பஸ்ஸின் துள்ளல் எப்படி இருக்கும் என்பது தெரிந்ததுதான்.) கதிரவனைப் போன்று சுடர் விட்டு பத்மினி பிரகாசிக்கிறார் என்பதுடன் மட்டுமல்ல! சூரியனது வெம்மையான கிரணங்கள், நாம் அவனைப் பார்க்கவொட்டாது கண்களை கூசச் செய்வது போல, பத்மினியின் புகழ் கிரணங்களான பத்திரிகை நிருபர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், சபா காரியதரிசிகள், புதிய படங்களுக்கு ஒப்பந்தம் செய்ய வந்த முதலாளிகள், டைரக்டர்கள் முதலானவர்கள் சூழ்ந்து, நாம் அவரைப் பார்க்க வொட்டாது தடை செய்கின்றனர். சரித்திர ஏடுகள் கஜினி முகம்மதுவின் படையெடுப்புகளின் எண்ணிக்கையை கூறுகின்றன. ஆனால் அந்த கஜினி முகம்மதுவே, பத்மினி அவர்களின் வீட்டிற்கு வரும் என்னைப்போன்ற பத்திரிகை நிருபர்களின் சலிக்காத படையெடுப்பை கண்டால் வாயைப் பிளந்துவிடுவான். என்ன செய்வது? நம் பத்மினி அவர்களுக்கு தினம் ஷூட்டிங் தொல்லை. அவை இல்லாத நாட்களில் அன்று மாலை நடக்கவிருக்கும் நடன கச்சேரிக்காக ஒத்திகை. அம்மாதிரி நாட்களில்தான் அவருக்கு ஷூட்டிங் இருக்காது. தினந்தோறும் நாங்கள் வந்து முடிவில்லாது உட்கார்ந்திருப்பதனால் தங்கள் வீட்டு ஆசனங்கள் தேய்ந்துவிடப் போகிறதே என்றாவது பயப்பட்டு, ஓய்வு நேரத்தை நமக்காக ஒதுக்கமாட்டாரா என்று எண்ணினேன். இறுதியில், ஒரு நாள் நடன ஒத்திகையின் பொழுதே, காலில் கட்டிய சலங்கையுடனே பேட்டி கொடுத்து, ஒரு இரவு தூக்கத்தை தியாகம் செய்து கட்டுரையும் எழுதிக் கொடுத்துவிட்டார். அவர் கட்டுரையை படிக்க களிப்புடன் காத்திருக்கும் உங்களுக்கு என் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு நான் விலகிக் கொள்ளுகிறேன். இனி படிக்க ஆரம்பிக்கலாம்.

—சாரக்ராகி.


காலம் என்னும் சக்கரம் வேகமாகச் சுழல்கின்றது. அது சுழல்வதில் என்றும் சளைப்பதாகத் தெரியவில்லை. அதன் வேகத்திற்கு ஓர் வரம்பு இருப்பதாகவும் தோற்றவில்லை. அதன் சுழற்சியில் இவ்வுலகின்கண் வாழும் நாமும் சிக்கி, சிற்சில மாறுதல்களையும் மேவி, வாழ்க்கையில் சந்தர்ப்பங்களுக்கேற்ப வாழ முயலுகின்றோம். நம் கண் இமைகளை கொட்டி ஒருமுறை மூடுவதற்குள் ஒரு நிமிடம் இறந்த காலமாக மாறி விடுவதை உணர்கின்றோம். காலம் நமக்காக காத்திருப்பதில்லை. அது தன் கடமையை மறக்காது நம்முடைய கடமையையும் நமக்கு உணர்த்தி, ஒரு கலங்கரை விளக்காக நின்று நமக்கு வழி காட்டுகின்

றது. ஆனால் இந்த காலத்தின் வேகத்துடன் கலை என்பதும் வேகமாக முன்னேறுவதில் துணிவுடன் போட்டியிடுவதை தற்காலத்தில் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆதியிலிருந்து இன்றுவரை நாம் ஆராய்ந்தோமானால் கலைகளில் காணப்படும் மாறுதல்களிலிருந்து அதன் முன்னேற்றத்தின் வேகத்தை உணர்ந்திடுவோம். கலைகள் எத்தனை வகை? அவை என்னென்ன? என்று நான் இக்கட்டுரையில் எழுதப்போவதில்லை. உயிர் வாழ உணவு மட்டும் போதாது. அவ்வுணவு உடலில் ஒட்டி உள்ளத்தில் உண்மை நிறைந்து வாழ கலைகள் மிகவும் அவசியம் என கருதும் அளவுக்கு ரசிகத்தன்மையில் முன்னேறியுள்ள உங்களுக்கு, நான் விரும்பி கற்றுள்ள நடனக் கலையைப் பற்றி எனக்குத் தோன்றியதை எழுதவே விரும்புகிறேன். அக்கலையே, திருவிதாங்கூர் சகோதரிகளென எங்கள் பெயருக்கும் பிறந்த ஊருக்கும் நிலையான புகழையும், நல் ஆதரவையும் உங்களிடையே எங்களுக்கு சம்பாதித்துக் கொடுத்தது.

தற்சமயம் வாய்ப்பேச்சில் வீரராக இருக்கும் மனிதர் குலம் ஆதியில் தங்கள் கருத்துக்களை ஒருவர்க்கொருவர் கைகளை ஆட்டி ஜாடைகள் செய்வதின் மூலமாக தெரிவித்துக் கொண்டதாகதான் நாம் அறிந்திருக்கிறோம். இன்னும் நாம் வாய் திறந்து பேசினால்கூட கைகளையும், முகத்தையும் கூடவே ஆட்டி நம்மை அறியாமல் அபிநயம் பிடித்துக்கொண்டேதான் பேசுகிறோம். நம்மில் சிலருக்கு இயற்கையாகவே அவ்வழக்கம் ஊறியுள்ளது. மரப் பொம்மை மாதிரி ஆடாமல், அசையாமல் பேசுபவர்களே நம்மில் அபூர்வம். கலை வளர்ச்சியில் வேகம் கண்டதால் சிற்சில மாறுதல்கள் தோன்றி, ராகம்—தாளம்—பாவம்—போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அந்த அபிநயங்களையே தனிப்பட்ட முறையில் புரிந்து நாளடைவில் சிறப்பு கொடுக்கலாயினர். பரதர் என்னும் முனிவர் வகுத்து அளித்த சாஸ்திரங்களைப் பின்பற்றி நடந்து அக்கலைக்கே பரத நாட்டியம் என்னும் பெயரை வைத்துவிட்டனர். தொன்மையான இந்த கலை தெய்வீகமென போற்றுவதற்குரியது. தில்லை ஆடும் பெருமான் சக்தியுடன் ஆடும் தோற்றத்தில், தூக்கிய திருவடிகளுடன் தான் பக்தர்களுக்குக் காட்சி அளிக்கின்றார். தெய்வம் உண்டு என்பதை நிரூபிக்கும் அக்கலை ஏன் தெய்வீகமாகாது? எந்த நாஸ்திக உள்ளத்திலும் பக்தியைப் பெருக்கச் செய்யும் பெருங்கலை அன்றோ அது! ஆனால் ஆடலில் வல்ல சிலரும் ஆத்தீகத்தைக் கண்டு எள்ளி நகைக்கிறார்கள்! பிறவியிலேயே உள்ளத்தில் ஊறியுள்ளதை பொறுத்திருக்கின்றது என்று கூறாமல் வேறு என்ன கூறுவது? நட

னத்திற்கு நாதன் ஹரன் என்றல்லவோ, ஒவ்வொரு பரத நாட்டியக் கச்சேரியிலும் சிவசக்தி நடனத்தை நியமித்திருக்கின்றனர். நவரசங்களையும் சித்தரித்துக் காட்ட நடன வகைகள்தான் எவ்வளவு? கடவுள் நடனத்திற்குத் தகுந்த நளினமான உடலமைப்பை பெண்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார். அதனால் அக் கலை அவர்களுக்கே தனி உரிமை என்று பொருளல்ல. "சாதி இரண்டொழிய வேறில்லை'' என்று இக்காலத்தில் கூறுகின்றார்கள். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை நடனக் கலை, சாதி இரண்டு என்ற அந்த வேற்றுமைகூட தனக்குத் தேவை இல்லை என்று மறுக்கின்றது. சலங்கை சப்தத்தில் மயங்கி சிந்தையை பறிக் கொடுக்காதவர் யார்? தற்காலத்தில் இந்த உன்னத கலையின் உண்மை உருவத்தை உணர்ந்துவிட்டனர்.

கடல் கடந்துகூட பரவி வர ஆரம்பித்துவிட்டது. திரைப்படங்களில் அதற்கெனவே ஒரு பகுதியை திட்டமிட்டு ஒதுக்குகின்றனர் திரைப்படங்களில் நடனமென்னும்பொழுது, ஒரு விஷயம் என் நினைவில் எழுகின்றது. படங்களில் கதாநாயகர்களைக்கூட இந்த கலை விட்டுவைத்ததாகத் தெரியவில்லை. ஆடத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் பைத்தியம் பிடித்தவரைப்போலவாவது நடிக்கச் செய்து அவர்களை ஆட வைத்துவிடுகிறார்கள் இந்த படவுலக சிருஷ்டிகர்த்தாக்கள். ஏன்? பரத நாட்டியத்தைச் சூழ்நிலையாகக் கொண்டு சிறு கதைகளும், தொடர்நாவல்களும் எழுத்தாளர்கள் வரைய ஆரம்பித்துவிட்டனரென்றால், அதன் முக்கியத்துவத்தைப் பற்றி வேறு கூறவும் வேண்டுமோ? அப்படி இருக்க படங்களில் என்னை ஆடாமல் இருக்க விடுவார்களா? ஆனாலும் "மங்கையர் திலகம்", "எதிர் பாராதது'' முதலிய படங்களில் நான் ஆடவே இல்லை. நான் ஏற்றுக்கொண்ட பாத்திரங்கள் எனக்கு அந்த படங்களில் புகழை சம்பாதித்துக் கொடுத்தது. எனக்கு இந்த ஷூட்டிங் தொந்தரவில்லாமல் ஆடிக் கொண்டே இருப்பதில்தான் ஆர்வம் மிக உண்டு. ஆடுவதில் சளைக்கமாட்டேன். என் கால்களில் கட்டிய சலங்கைகளும் சளைக்காது. வேய்ங்குழல், யாழின் நாதம் இவைகளுடன் சலங்கையின் இனிய சப்தத்தையும் சேர்க்கலாம். அதன் சப்தத்தில் தனி சுவர்கத்தை சிருஷ்டித்துக் கொண்டு அதிலேயே சதா சஞ்சரிக்க விரும்புகின்றேன். ஆனல் இப்பொழுது அந்த சப்தத்தில் ஜீவன் சமீபத்தில் குறைந்துவிட்டதாகக் கருதுகின்றேன். இந்தக் குறை எனக்கு பழகும்வரையில் சிறிது சிரமமாகத்தான் இருக்கும். அது இன்னதென உங்களுக்கே தெரிந்திருக்கும்! என் சகோதரி லல்லி (லலிதா) என்னுடன் சேர்ந்து ஆடு



—By courtesy of Kumudam.

வதில்லை இப்பொழுது என்பதைதான் குறிப்பிடுகிறேன். ஆனால், அக் குறையிலும் சிறு நிறைவு! இப்பொழுது ராகினியும், நானும் எங்களது கோஷ்டியாருடன் மேடைகளில் நடனக் கச்சேரிகள் செய்து வருகின்றோம்! ஆனால் ரசிக மகா ஜனங்கள் "லலிதா-பத்மினி டான்ஸ்" என்று தான் கூறுகிறார்கள். எங்கள் இருவர் பெயரையும் ஒன்றாகச் சொல்லி பழக்கமானதே இதற்குக் காரணம். லல்லியின் பெயர் ரசிகர்களின் வாயிலாக என் பெயருடன் சேர்ந்து இருப்பதே அவள் என்னுடன் ஆடாத குறையை நீக்கி எனக்கு ஒருவித உற்சாகத்தை அளிக்கின்றது.

நடனம் என்பதைப் பற்றி எழுதவோ, பேசவோ புகுந்தால் அந்தம் என்பது இல்லாது வளர்ந்து கொண்டே போகும். மேலும் அந்த ஆர்வமே என் உள்ளத்தில் நிறைந்து கிடப்பதால், உற்சாகத்தில் என்னை மறந்து எழுத ஆரம்பித்து விட்டேன். அதனால் இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன். நான் மேலும் எழுத நினைத்தாலும் இவ்வளவு நேரமாக பலவந்தமாக விரட்டிக்கொண்டிருந்த நித்ராதேவி இனியும் என்னை விடமாட்டாள். ஆ....வ். தன் வருகையை கொட்டாவி என்னும் தூதுவனின் மூலமாக கட்டியம் கூறிவிட்டாள். என்ன செய்வது;


# உத்தமியின் மறைவு

இன்றைக்கு சுமார் ஒன்பது வருடங்களுக்கு முன் ஒரு நாள் காலை; அன்று உலகமே துக்க சாகரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த நாள்...காரணம்? உலகம் போற்றும் உத்தம த்யாகமூர்த்தியான காந்தி அடிகளை இழந்து அந்தகாரத்தில் குழந்தை முதல் கிழங்கள்வரை தத்தளித்துக் கொண்டிருந்த துக்ககரமான நாள். அப்புனித மூர்த்தியின் ஞாபகார்த்தமாக திருவல்லிக்கேணியில் உருவாகியதே நம் **மகாத்மாஜீ சேவா சங்கம்** என்கிற ஸ்தாபனம். 1948-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி அதிகாலையில் மகாத்மா மறைவின் அனுதாப கூட்டத்தின் ஊர்வலம் நடத்தினார்கள்.

சங்க ஸ்தாபகர்களில்முக்யஸ்தரான ஸ்ரீ எம்.ஓ.ஜானகி அம்மாள் அவர்களின் குடும்பமும் அன்று இதில் கலந்து கொண்டது. "பூங்கொடியோ பொன்னந்தழையோ" என்று ஐயுரும்படியான ஒரு பிம்பம் வருந்திய முகமும் நீர் தோய்ந்த கண்களும், குவிந்த கரங்களுடனும் அக்கூட்டத்தில் ஸ்ரீ எம். ஓ. ஜானகி அம்மாளின் நிழல்போல் நின்று இருந்த அப்புனித உருவத்தை இன்றும் எங்களால் மறக்க முடியவில்லை. அவர் தான் ஸ்ரீ எம். ஓ. ஜானகி அம்மாளின் மூத்தமருமகளும், பக்தன் ஆசிரியர் ஸ்ரீ எம். ஓ. அழகியசிங்கராசாரியாரின் தர்மபத்னியானஸ்ரீ எம். ஓ. அலமேலா என்பதை கூறவேவேண்டாம். அந்த உத்தமியின் இதயத்தில் பசுமரத்தாணி போல் சங்கத்தின் பால் பதிந்த பேரன்பு நாளுக்கு நாள் சிறப்புடன் வளர்ந்து, சங்கத்தின் சேவைகளில் பெரும்பாகமும் பங்கெடுத்துக்கொண்டு, அளப்பரிய உத்ஸாகத்துடன் உழைத்து, எங்கள் எல்லோருடைய இதயத்திலும் ஒரு த்னி ஸ்தானம் பெற்றுவிட்டார். அவருடைய அழகிற்கும், அடக்கத்திற்கும், பணிவுக்கும் சிகரம் வைத்தது போல் அமைந்துள்ள சாந்தத்தையும், உத்தம குணத்தையும் எடுத்துச் சொல்வதென்றால் இச்சிறிய ஏட்டில் இடம் போதாது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையில், குடும்பத்திற்கு குலவிளக்காயும், பெரியோர்களுக்கு சிறு குழந்தைபோலும், சங்கத்திற்கு ஒப்புயர்வற்ற ஜோதியாயும், கணவனுக்கு கருத்தொருமித்த நிழ

---

நேரமில்லாத குறையினால் அந்த இரவு வேளையில் தூக்கத்தையும் துறந்து எழுதவேண்டியதாக இருக்கின்றது. ஆனாலும் இக்கட்டுரையை எழுதி முடிக்கும்பொழுது ஒரு சிறு திருப்தி! உங்கள் "ஜகன் மோகினி" நிருபர் பல முறைகள் எனது இல்லத்திற்கு நடந்ததற்கு, இறுதியில் எப்படியோ அவருக்கு ஒரு கட்டுரையை எழுதி கொடுத்து விட்டேன். எனது மதிப்பிற்குகந்த ரசிகர்களான உங்களுக்கு எனது வணக்கங்கள்.



லாயும், சுற்றத்தவருக்கும், சிநேகிதர்களுக்கும் ஒப்பற்ற மந்திரிமதி போலும் வாழ்க்கை நடத்திய விசித்திரத்தை வர்ணிக்க முடியுமா?

இந்த பத்து வருட காலமாய் சங்கத்தில் அலமேலாவுடன் நான் பழகியதிலிருந்து பல உயர்ந்த விஷயங்களை அவளிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோருடனும் இன்பமாகவும் சிரித்த முகத்துடனும் பேசுவார். ஆனால் 'வளவள' வென்று வார்த்தை கொட்டமாட்டார். சமயத்திற்கு தக்கவாறு பொருத்தமாயும், பொறுக்கிய மணிகளாகவும் பேசுவார். ஆனால் அது கருத்தில் பதிந்து ஊன்றிவிடும். அதில் ஹாஸ்யமும் நிறைந்து இருக்கும். அலமேலா வம்பு பேசி வீண் பொழுதுபோக்கியதை நான் ஒருநாளும் கண்டதில்லை. சங்கத்தின் பொருட்காட்சி நடக்கும்போதும், விளையாட்டுகள், லக்கீடிப் நடக்கும்போதும் மணிகணக்கில் நானும், அவளும் சேர்ந்தே இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவளுடைய பல சிறந்த குணங்களை

யும், பரந்த நோக்கங்களையும் நான் தெரிந்துகொண்டேன். சங்கத்தின் நிர்வாக அங்கத்தினரில் ஒருவரான...எனது சிறந்த சகோதரியை 1957 மே மாதம் 16-ம் தேதி பறி கொடுத்துவிட்டு தத்தளிக்கும் துர்பாக்யம் எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

48-ம் வருடம் அந்த புனிதவதியைக் கண்டு ஒரு சிறந்த சினேகிதை கிடைத்தாள் என்று பூரித்த உள்ளம், 57-ம் வருஷம்...இன்று அவளைபறிகொடுத்துவிட்டோமே என்று ஏங்கி தவித்து உருகுகின்றது. உலக விசித்தி ரத்தில் ஒன்றும்...காலசக்கரத்தின் சுழற்சியும்போலும். எல்லோருடைய இதயத்திலும் தனி ஸ்தானம் பெற்று விட்ட ஸ்ரீமதி அலமேலாவின் ஆத்மா சாந்தி அடைய வும், அவளுடைய பிரிவால் கதறும் அவள் குடும்பத்தின ருக்கும், மற்றவருக்கும் ஆறுதலை அளிக்க கடவுளை ப்ரார்த்திக்கிறேன். சௌபாக்யவதியாய் மறைந்த என் ஆப்த சினேகிதியை பற்றி இப்படி எழுதும்படியான ஒரு துர்ப்பாக்யம் இந்த கைக்குக் கிடைத்ததுபற்றி மிகவும் வருந்துகிறேன்.

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகள் தீர்ந்துவிடுமா? ஓடுகிறவரையில் சக்கரம் ஓடட்டும் என்று நேருஜீயும் இருந்து, வருகிறாரா? ஹைடி ரஜன் வெடி யெதிர்ப்பு ஆதிமுதல் ராஜாஜி ஆரம்பித்த எதிர்ப்புதானே! அவர் என்றைய அரச பதவியாளரதும் நண்பர்தான். ஆனால் நமது தலைவர்கள் அவரது நண்ப ரில்லையானால், அவரது இந்த ஆதிக் கொள்கை மட்டும், இன்றைய பதவியாளர் ஆமோதித்து முன் வந்து பிரசுரிக் கும் உயர்வு பெற்றதாயிற்று? இதெல்லாமென்ன, சுவற்றை இடித்துக் கண்ணுமூச்சு யாட்டமா? மக்கள் வேண்டுவது சாந்தியும், செழிப்பும். அதையெல்லாம் வாயால் பேசி, செயலில் ஒழித்து, மனத்துள் வெறுத்துப் போடும் பதவியாளர், மதப்பற்றற்றவர்தாம். ஆனால் இனி யும் இன்னாரை இருக்க விடுவதா என்பதைத்தான் வாக் குரிமை கொண்ட மக்கள், தேர்தல்களில் தேர்ந்து சிந்தித் தாக வேண்டும். இந்நிலை நீடித்தால், சுதந்திர இந்தியா வில் இன்றைத் தாழ்மைநிலை மேலும் ஓங்கிடும். இவ்வரிகள் விதித்தும் ஐந்தாண்டு திட்டம் நிறைவேறப் போவதில்லை தான். நாட்டில் பஞ்சமும், பட்டினிச் சாவும் நிறைந் திடவே புதுத் திட்டங்கள் அடிகோலிகளாயமைகின்றன வென்றே ஊகித்து மனம் நோகத்தான்வேண்டி வருகிறது.

வில்லம்பு சொல்லம்பு மேதினியி லம்பிரண்டாம்
வில்லம்பிற் சொல்லம்பே வெய்யதாம்—வில்லம்பு
பட்டதடா என் மார்பில் பார்த்திபா
உன்குலத்தைச்சுட்டதடா என் வாயிற்சொல்"!

# தாயின் மணிக்கொடி

**சின்ன ரங்கா.**

நாங்கள் எல்லோரும் ஒரு நாள் மாடியின்மேல் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது, பாரதியாரும் வா.வே.சு. ஐயரும் வீட்டுக்கு முச்சியனோடு வந்தார்கள். அவர்கள் பின்னாலேயே எங்க வீட்டு வேலைக்கார பையன் பெரிய அழகான பாரதமாத விக்ரஹத்தை கொண்டுவந்து மேஜையின்மேல் வைத்தான். அது அந்த பெரிமுச்சியன் என்பவர் செய்தது. நாங்கள் ஓடி வந்து பார்த்தோம். ரோஜாபூ கலரில் புடவையும் பச்சை கலர் ரவிக்கையும், தலைக்கு கிரீடமும் மூக்குத்தி கம்மல் கழுத்துக்கு ஸரம் கைகளுக்கு வளைகள் முதலிய ஆபரணங்களோடும் தேசியக் கொடி கையில் பரக்கும்படியாக வெகு அழகாய் இருந்தது. அவள் கீழ் சமுத்ர அலைகள் முத்து ரத்தினங்களை வாரிச் சொரிகிறதுபோலவும் பக்கத்தில் தாமரை மொக்கு இலங்கை யாகவும் வெகு ரம்யமாய் லக்ஷ்மீகரமாய் ப்ரகாசித்தது. அதன் எதிரில் மூன்று சுதேசி பக்தர்களும் ஸ்ரீ ஆசாரியரின் அண்ணன் மகனை சாமியும் (எஸ். டி. கிருஷ்ணமாச்சாரியார்) எல்லோரு மாக நின்று இருந்தார்கள். ஸ்ரீமதி செல்லம்மாள், ஸ்ரீரங்கம்மா சகுந்தலா, தங்கம்மா, ஆண்டாள், நான் எல்லோரும் வரிசையாக வந்து நின்றோம். பாரதி "முச்சியனைப் பார்த்து, நான் சொல்லிய படி பாரதமாதாவுக்கு ஆபரணங்கள் எல்லாம் பூட்டி சாஸ்திர களையுடன் வெகு ஆச்சிரியகரமாய் செய்திருக்கிறீர்களே" என்றார்.

முச்—நீங்கள் எல்லோரும் படத்தை கொண்டுவந்து காண பிக்கும்போது நான் இதை இவ்வளவு நன்றாய் செய்வேன் என்று நினைக்கவே இல்லை. எல்லாம் தேவியின் அருளும், நீங்கள் கொடுத்த சலுகையும் கூடி இவ்விதம் செய்தேன் என்றார்.

ஐயர்—ஆஹா! அவள் புடவைஒவ்வொரு மடிப்பிலும்தேசங் களும்,ஊர்களும் எவ்வளவு தெளிவாய் எடுத்துக் காண்பிக்கிறது. நான் சிற்ப சாஸ்திரத்தை இப்பொழுதுதான் படித்தேன். அதுவும் இவர் பாட்டனாரிடம் இருந்ததாம் அதைக் கேட்டு வாங்கிப் படித்தேன் என்றார்.

ஸ்ரீ. ஸ்ரீ—அப்படியா! இதோ பாரும் அந்த சமுத்ர அலை முத்தும் மணிகளையும் வாரிப் பூமழை சொரிவது போலவும் நீர் துளிகள் துள்ளுவது போலவும் பார்வைக்குத் தோன்று கிறது என்றார்.

அது வேளைக்கு பையன் ஒரு கூடை நிறைய பழங்களும் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கும் கொண்டுவந்து வைத்தான். எங்கம்மா ஒரு ஜதை வேஷ்டியும் சொம்பு நிறைய பாலும் கொண்டுவந்து வைத்தாள். அது வேளைக்கு என் அண்ணன் பாரதியாரைப் பார்த்து,

"பாரதி நீர் இப்போது;ஒரு பாட்டு பாடினால் வெகு நன்றாய் இருக்குமே! உம் மனதில் எதை அவளிடம் உயர்வாக நினைக் கிறீரோ அதை எடுத்துப்பாடும்" என்றான்.

நாங்கள் எல்லோரும் அவர் முகத்தை பார்த்துக் கொண் டிருந்தோம். அவர் எதை உயர்வாக எண்ணி பாடுவார்

என்கிற ஆத்திரம் எங்களால் அடக்க முடியாத ஆவலை உண்டாகிற்று.

பாரதி பாரதமாதாவின் உருவத்தை கால் முதல் தலைவரை ஒரு பார்வை ஓட்டினார். உடனே கம்பீரக் குறலில்.

**பல்லவி**

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

**சரணம்**

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின்மேல் 'வந்தே மாதரம்'என்றே.
பாங்கின் எழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

இந்த பாட்டை அடிகளுடன் பாடி முடித்தார். எல்லோரும் ஆனந்தத்துடன் கேட்டு மகிழ்ந்தோம். முடிந்தவுடன் அந்த முச்சியன் அவர் காலடியில் விழ்ந்து "இந்தப் பாட்டைக் கேட்க எவ்வளவு நாள் தவம் செய்திருந்தேனோ தெரியவில்லையே. தாங்கள் என் வீடுவந்து போனது என் பாக்யமே'' என்றார்.

ஸ்ரீ. ஸ்ரீ—ஆமாம் அவர் பிறந்திருக்கிறது நமக்கெல்லாம் அறிவூட்டும் தெய்வமாகவே பாவிக்கவேணும். வெறும் சாதாரணமான கவியல்ல'' என்றார்.

ஐயர்—நிஜம்தான். இந்த பாட்டு உலகமெல்லாம் பரவி ஜனங்களை சந்தோஷப்படுத்த இது மங்களமான பாட்டாய் சுதந்திரமும் சுருக்கவே வரவேண்டும் என்றார்.

நாங்கள் எல்லோரும் வெகு சந்தோஷத்துடன் பாரத மாதாவுக்கு கர்பூரத்தை எடுத்து வைத்தோம். அந்த முச்சியனே கர்பூரத்தை கொளுத்தினார். தேங்காய் உடைத்து நிவேத்தியம் செய்தார். நாங்களும் பாரதமாதாவை வணங்கினோம். பிறகு எங்கப்பா சம்பாவனையோடு வேஷ்டியும் சன்மானமும் அவருக்கு கொடுத்து வாழ்த்தினார் யாவரும் த்ருப்தியுடன் பாரதமாதாவிடம் ஐக்யமானோம்.

---



வக்கில்:—என்டா! இத்தனை நாள் கழிச்சிமூண்ணும் கல்யாணம் பண்ணிக்க போறயா?

சுப்பு:—ஹி...ஹி... உங்களுக்கு தெரியாத சட்டமா? பெண்களுக்கு சொத்துரிமை சட்டம் வந்துடுத்தாமே அதுனாலே... அந்த பெண்ணுக்கு...




அங்கிருந்தவர்கள் எல்லோரும் திகைத்து அதிர்ச்சியில் அமிழ்ந்திருந்தார்கள். அந்நிலையிலிருந்து மீளுவதற்குள் "ஹஹ்ஹா.... டேய் ரகு லூஸ் என்றுதானே சொன்னாய். லூஸ் என்ன செய்யும். என்னடா செய்யும்?....தெரியாது! இப்படிக் கூறிக்கொண்டே மற்றொரு கன்னத்திலும் ஓங்கி அறைந்தாள். பிறகு 'இப்படிதான் செய்யும்...லூஸுக்கு அடிக்கத்தானே தெரியும்... எப்படி இருக்கிறது' என்றாள். ராக்ஷஸனின் பேயொலியைவிட பயங்கரமாக ஒலித்தது லக்ஷ்மியின் குரல்.

என்ன கொடிய கல்நெஞ்சனாக இருந்தாலும் கன்னத்தில் விழுந்த அடியில் ரகுவும் ஸ்தம்பித்து, கன்னத்தைத் தடவியவாறு நின்றிருந்தாள்.

"சி...த்தீ!...என்ன....இப்...படி"—என்று ரேவதி குழறினாள். அவள் குரலில் பயத்தோடு, கவலையும் நன்றாகத் தென்பட்டது.

"உம்.... ரேவதீ! பயந்துவிட்டாயா? எனக்கு பயித்தியம் பிடித்துவிட்டது என்று எண்ணுகிறாய் அல்லவா? நன்றாக இருக்கும்போதே என்னருமை மகன் எனக்கு அன்பாக பட்டம் சூட்டியிருக்கிறானே. அதன் பிறகுலூஸாகாது இருக்கலாமா?" என்றவள் ரகுவை ஒரு முறை முறைத்தாள்.

இத்தனை நேரம் கழித்து ரகு பேச ஆரம்பித்தான். "ஏன் அப்படி முறைக்கிறாய் ஆந்தைபோல். இத்தனை நாள் கழித்து வீடேறி வந்தால்..."

"ஹூம்... வீடேறிவந்தால்....'வா. அப்பா மகனே எங்கேயடா போய்விட்டாய்?' என்று உன்னைக் கட்டித் தழுவி கண்ணீரால் அபிஷேகம் செய்வேன் என்று எதிர்பார்த்தாயா? சீ போடா...அயோக்கியன் அக்காவிற்குப் பெண் தேடுகிறானும். நாங்களெல்லாம் மனிதர்களில்லையா. எங்களுக்கு அக்கறை இல்லை இவனுக்குத்தான் பாவம்."

"உன்னுடைய அன்பு அழைப்புக்கு இங்கு யாரும் ஏங்கவில்லை. அம்மாவாம்....அம்மா... அடுப்புக்கட்டையே உத

வும். நண்பர்கள்முன் அவமானப்படுத்திவிட்டு, என்னைக்கை தொட்டு அடிக்கவா அடிக்கிறாய். ஏன்....? உன்கீழ் சாப்பாட்டிற்கு நிற்பேன் என்றுதானே? இந்தத்துள்ளல் நீடித்து ஓடாது. பள்ளத்தில்தான் கவிழும். இத்தனைநாள் இருந்து விட்டு வரவில்லையா? வீட்டைவிட்டு வெளியே போனால் எந்தப் பக்கத்திலும் என்னைத் தாங்க நண்பர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். நான் சுகமாக வாழ எனக்கு முடியும். யார் தயவும் தேவையில்லை. இதோ போகிறேன். ரேவதி! என்னுடன் உறவாடி சதி செய்து விட்டாயே. அது விளையாட்டாகப் போகாது. உன்னை ஆட்டியே பழியை தீர்த்துக் கொள்ளும். ரேவதி! எனக்கு நீ செய்த துன்பங்களுக்கு, நன்ருகக் கஷ்டப்படவேண்டும்." என்று ரேவதியையும் ஆசீர்வதித்துவிட்டு நேரே தன் அறைக்குச் சென்ருன். கையில் ஒரு பெட்டியுடன், நண்பர்கள் தொடர வெளியேறினன்.

ரகு சென்றதும் "ஹும்... தலைவிதி, சோதனை எல்லாம் ஒன்ருக சேர்ந்து இப்படியா ஆட்டவேண்டும்?" என்றவாறு அமர்ந்தாள் லக்ஷ்மி. ரேவதி "சித்தி! நீ அவசரப்பட்டு அடித்து விட்டாயே. இதனல் நமக்கு தொந்திரவுகள் தான் அதிகம் ஆகும். எனக்கு பயமாகத்தான் இருக்கிறது."

இதற்கு லக்ஷ்மியால் பதில் ஒன்றும் சொல்ல முடிய வில்லை. ரேவதியும் தன் அறைக்குப் போனள்.

வீட்டில் ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. நாட்கள் நகர நகர நிம்மதி குறைந்து கொண்டே வந்தது.

"அம்மா! ரகு வீட்டிலிருந்து போனதிலிருந்து இப்படியே உட்கார்ந்திருக்கிருயே. எத்தனை நாள் இப்படி இருக்கப்போவதாக உத்தேசம்? நாங்கள் எல்லாம் இல்லையா. அல்லது ரகுவை எப்படி வரவழைப்பது என்பதைப் பற்றியாவது யோசனை செய்?" என்று பெரிய அனுபவம் வாய்ந்தவள்போல் புத்திமதியும், யோசனையும் கூறினன் சரோஜா.

யோசித்து யோசித்து லக்ஷ்மியின் மூளைதான் களைத்து விட்டது. இன்னும் சிறிது நேரம் போனல் கலங்கியும் விடும்.

"சரோஜா! நீ சதாசிவத் தாத்தா வீட்டிற்குப் போய் வருகிருயா? நான் கடிதம் தருகிறேன். முத்துவும் அவர்கள் வீட்டிற்கு வந்து நாளாயிற்றே. எப்படி இருக்கிருன் என்றும் பார்த்து வா" என்ருள்.

மறுநிமிடம் கடிதம் எழுதிவிட்டு அதை ஒருமுறை தன் மனதிற்குள் படித்து பார்த்தாள். கடிதம் சதாசிவத்திற்கு நேராகத் தானே எழுவதற்கு மனம் துணியவில்லை. மேலும் ரகு லக்ஷ்மியின் பேரை வைத்து, கடிதம் எழுதி

மானம் போய்விட்டதால் இக்கடிதத்தை பார்வதிக்கே எழுதினள்,

"அன்புள்ள பார்வதி அம்மாளுக்கு,

எங்களை எத்தனையோ விதத்தில் கை கொடுத்தது போல் முத்துவையும் கவனித்து, தங்கள் வீட்டில் வைத்துக் கொண்டு எனக்கு மனச்சாந்தியையும், நிம் மதியையும் அளித்தீர்கள். இவ்வுதவிக்கு என்றும் கடமைபட்டவள். முத்து சௌக்கியமாக இருக்கிருனா? அவனை 'வா' என்று நாங்கள் நச்சரித்து அழைக்க வில்லை. உடம்பு நலம் ஆனதும் எப்பொழுது முடி கிறதோ அப்போது வரட்டும். அவசரமில்லை.

மேலும், தங்கள் பர்த்தாவை, ஒழிந்த நேரத்தில் சில நிமிடங்கள் இங்கு வந்துவிட்டு போகுப்படி நான் கேட்டுக் கொண்டதாகச் சொல்லவும். சில முக்கிய மான விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. ச்ரமத் திற்கு மன்னிக்கவும்.

இங்ஙனம்,
லக்ஷ்மி"

மனதிற்கு சரி என்று தோன்றியதும் அனுப்பினள். சரோஜாவும் சந்தோஷத்துடன் குதித்தோடினள்.

சரோஜா போனபோது சதாசிவம் பத்திரிகையில் மூழ்கியிருந்தார். சரோஜா அறை அறையாக புகுந்து மீண்டுகொண்டிருந்தாள். சட்டென்று திரும்பிய சதாசிவத் தின் கண்களில் இவள் தென்பட்டவுடன் "என்னம்மா சரோஜா யாரைத் தேடுகிருய்? முத்து வேண்டுமா?" என் ருர். அவள் கையில் இருந்த கடிதத்தைப் பார்த்ததும் "கடிதமா அது?" என்றும் கேட்டார்.

"ஆமாம் தாத்தா கடிதம்தான்........உங்க........" என்று கூறிவிட்டு மீண்டும் நகர்ந்தாள். "கொடு, எனக்குதானே! அம்மா எழுதியதா?" என்ருர் சதாசிவம்.

"அது எப்படி கொடுக்கமுடியும்? உங்க பாட்டிக்குத் தான் எழுதியிருக்கா. அவரைக் கூப்பிட்டால் கொடுக் கிறேன்".

அதற்குள் அங்கு வந்த பார்வதி, இவள் தர்க்கத்தை கவனித்து, ''சரோ! என்னிடமானல் என்ன? அவரிடமா னல் என்ன? கொடம்மா. என்ன ரகசிய சமாசாரம் இருக்கப் போகிறது?"

"அட ராகவா! இதென்ன வேடிக்கை. எங்கள் வீட் டில், ஒருவர் கடிதத்தை ஒருவர் தொட்டுவிட்டால், ஒரே சண்டை அடிதடிதான். ஆனல் ரஞ்சன் அண்ணு திட்ட மாட்டான். எங்கள் வீட்டு ஞாபகமாகவே. உங்கள் கடி

தம் உங்கள் கைதான் சேரவேண்டும் என்று அப்படி சொன்னேன் பாட்டி!" என்று கூறி கலகலவென சிரித்தாள்.

கடித விஷயமறிந்த சதாசிவமும், "சரோஜா! நான் பிறகு வருகிறேன் என்று சொல். எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்."

"அதையெல்லாம் இப்போது என்னிடம் கேட்காதீர்கள் தாத்தா. சரி....முத்துவைப் பார்த்து நாளாகிவிட்டது. எங்கே அவன்?" என்றவாறு பின்புறத்திற்கு நடை கட்டினாள். சதாசிவமும் பார்வதியும் அவள் ஓடுவதைப் பார்த்து மகிழ்ச்சியில் திளைத்தனர்.

"முத்து!" என்று சரோஜா அவன்மேல் விழுந்தாள். "முத்து நீ இல்லாமல் வீடு நன்றாகவே இல்லை. எப்போது வருவாய்?"

"கண்ணு, சீக்கிரம் வந்துடறேன். என்னாலேயும் சும்மா படுத்துகிட்டு இருக்க முடியல்லே. அண்ணு, அக்கா, அம்மா, எல்லாரும் எப்படி இருக்காங்கோ? கலாட்டா எல்லாம் அடங்கியிருக்குதா?"

"நன்றாய் கேட்டாய். பருப்பில்லாமல் கல்யாணம் நடக்காதுபோல் சண்டையில்லாமல் ஒருநாள் கூட நகராது. எனக்குஒன்றும் பிடிக்கவில்லை. முத்து எங்காவது ஊருக்கு போய்விடலாம் போல் இருக்கிறது. உன் உடம்பு எப்படியிருக்கிறது. அதை முதலில் சொல். உன்னைதான் அந்த பாவி ரகு பல்லை உதிர்த்து தாத்தாவாக்கிவிட்டானே. இந்த சமாசாரமெல்லாம் வள்ளிக்குத் தெரியுமா? அவ உடம்பு சரியாக வருவதற்குள் உனக்கு இப்படி ஆகிவிட்டதைக்கேட்டு அவள் அழுவாள் இல்லை. பாவம். உங்க இரண்டு பேருக்கும், நல்லவர்களாயிருந்தும் ஏன் இப்படி கஷ்டம் வருகிறது. ரஞ்சன் அண்ணுக்கு உன் மேலே ரொம்ப ஆசையோன்னோ. அதனுல் இதையெல்லாம் கடிதம் எழுதணும், அப்படி இப்படின்னு அம்மா....

"ஐயய்யோ! வேணும்மா....அம்மாவா....எழுதிபுட்டாங்களா....அவராவது சந்தோஷமா யிருந்தா........போதும்னு நெனச்சா....என்னம்மா இது...." என்று கத்திவிட்டான் முத்து.

"முத்து........அவசரப்படாதே. எழுத அம்மாவுடைய மனசு நெனைத்தது. ஆனல் அப்புறம் வேண்டாம்னு........ அவனுக்கு கஷ்டம்தான்...என்று நிறுத்தியாகி விட்டது. ஐயோ.......அம்மா போனேன் வந்தேன் என்று வரச் சொன்னுள். நான் போகிறேன். என்ன? சீக்கிரம் வந்துவிடு" என்று கூறியவள் முத்துவைத் திரும்பித் திரும்பி பார்த்தவாறே வீட்டிற்குப் போனுள்.

அவள் போகும்போது அங்கு சதாசிவமும், லக்ஷ்மியும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

"சரோ! நீ வந்து சொல்லி நானே வந்துவிட்டேன். உனக்கு எவ்வளவு நேரம்?" என்று சிரித்தவாறு கேட்டார் சதாசிவம்.

"ஏன் தாத்தா முத்துவோடு பேசவேண்டாமா? அதற்கு சிறிது நேரம். ஹூம்...நீங்கள் காரில் 'பர்'னு வந்து விட்டதால் சீக்கிரம் வரலாம். நான் நடந்து நடந்து தானே வரவேண்டும்."

"பாவம் நடந்து நடந்து.......எத்தனை நடந்து..........ஒரு மைலா....உன் வாயாடிதனம் எங்கு போனாலும் போகாது. சரோ! நீ போம்மா நாங்கள் பேசவேண்டும்" என்று கூறி அவளை செல்லமாகத் தட்டி அனுப்பினாள் லக்ஷ்மி.

'ஹூம்...... என்ன பேச்சு இருக்கிறது. எல்லாம் ரகுவைப் பற்றிதான். எனக்கா தெரியாது' என்று மனதில் கூறிக்கொண்டேதான் சென்றாள் சரோஜா.

"என்ன செய்யலாம் சொல்லுங்கள்" என்று மௌனத்தைக் கலைத்தாள் லக்ஷ்மி.

"ஆத்திரத்தில் அடித்துவிட்டாய். அவன் வீட்டிலிருந்தால் ஆபத்து. மேலும் அடித்து திருத்தலாம் என்று நினைத்து செய்துவிட்டாய். அவன் வெளியேறியதனால்தான் பெரும் ஆபத்துகளுக்கு இடம் ஏற்படும் லக்ஷ்மி. முள்ளில் விழுந்த சேலையை மெள்ள மெள்ளதான் எடுக்கவேண்டும். பிடித்து இழுத்தால் கிழிந்து விடுவதுபோல், இப்போது பிய்த்துக்கொண்டு போயிருக்கிறான் ரகு. எங்கு போவான். சிநேகிதர்கள் வீட்டிற்குதான் போயிருப்பான். கவலைப் படாதே. நான் எப்படியாவது அவன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்கிறேன்."

"இப்போதே போகிறீர்களா. இங்குதான் அருகில் இருப்பான்."

"ஹூ-ஹூ-ம்... இந்த விஷயத்தில் அவசரமே கூடாது. இப்போது அவன் ஆத்திரத்தில் இருப்பதால், போனாலும் ஏதாவது கரடுமுரடாக நடந்துவிடும். விரோதத் தீ அதிகமாகப் பற்றி எரியும். இரண்டு நாள் அவன் ஆத்திரம் தீர விட்டுவிட்டு பிறகுதான் போகவேண்டும்."

"நீங்கள்தான்....எல்லாம்...என்னைக்......." என்று தடுமாறி கூறியவள் விக்கி விக்கி விசும்ப ஆரம்பித்துவிட்டாள்.

அவள் அழுவதை சகித்துக் கொள்ளமுடியாமல் "அம்மா! மனதை தளரவிடாது இருங்கள். உங்கள் மகனை எப்படியாவது சேர்த்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு விடுவிடென்று போய்விட்டார் சதாசிவம்.

முகத்தில் புதைந்திருந்த கைகளை விடுவித்துக்கொண்டு கண்ணீர்த்திரையின் நடுவே சதாசிவத்தின் உருவத்தைப் பார்த்தாள். 'ஹூம்' என்ற பெருமூச்சும், 'கருணைக் கடல்' என்ற சொல்லும் அவளிடமிருந்து வெளிவந்தன.

---

### அத்தியாயம்

### வளர்த்த கடா மார்மேல் பாய்ந்தது

நாட்களும், வாரங்களும் கவலையில்லாமல் கடந்து கொண்டே இருந்தன. ரகுவின் செய்திகளில் ஒருவருக்கும் புலன் ஏற்படவில்லை. சதாசிவமோ இந்த விஷயத்தில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தார். லக்ஷ்மி அம்மாள் தவித்துத் தண்ணீராய் உருகிக் கொண்டிருந்தாள்.

எப்போதும் வேலைசெய்து தேய்ந்துபோயிருந்த மூத்துவிற்கு, இத்தனை நாள் படுத்திருந்ததே நரக வேதனைபோல் இருந்தது. மேலும் இவனுக்கு உடம்பு என்று தெரிந்ததிலிருந்து வள்ளியும் அங்கு துடித்தவாறிருந்தாள். அதனால் சதாசிவத்தின் உத்தரவுக்காக எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தான்.

ஒரு தினம் தானாகவே "எஜமான்! இந்த ஓய்வு போதுங்க. வள்ளியெ பார்த்து நாளாச்சு. அதனாலே



கிராமத்துக்குப் போயி இரண்டு நாள் இருந்துட்டு வள்ளியோட ஊர் திரும்பிட்ரேனுங்க" என்றான்.

"என்ன முத்து அப்படி பறக்கிறாய்? ஹ-ம். சரி. போ. கிராமத்துக்குப்போய் இரண்டு நாள் இருக்கிறேன் என்பதால் அனுப்புகிறேன். ஆனால் இதற்குள் வேலை எல்லாம் செய்யாதே. உடம்பிற்கு ஆகாது. சரி போய் திரும்பும் போது நேரே உன்வீட்டிற்கு போய்விடாதே. இங்கு வந்து இறங்கு. பிறகு அங்கு அனுப்புகிறேன்."

"அப்படியே ஆவட்டங்க நான் வர்ரேன்" என்று விடை பெற்றான் முத்து.

அன்று லக்ஷ்மிக்கு தைரியம் கூறிவிட்டு வந்தாரே தவிர, இவர் மனது ஒய்ந்து உட்கார்ந்து விட்டது. முகத்தில் சிரிப்பு போய், எப்போதும் யோசனையிலேயே ஊறியிருந்தார். மனதை சிறிது நேரம் இக்கவலைகளிலிருந்து திருப்ப ஏதாவது புத்தகம் எடுத்து படிக்க உட்கார்ந்தாலும் மனது அதில் லயிக்கவே மறுத்தது.

* * *

ஒரு நாள் இரவு 12மணி சமயம் இருக்கும். சதாசிவத்தின் அறைவாயிலில், முகமூடி அணிந்த ஒரு கரிய உருவம் நின்றது. கதவை தாண்டியும் உள்ளே பிரவேசித்தது. வயோதிகமும், கவலையும் ஒன்று சேர்ந்து தூக்கமில்லாத சதாசிவம் எல்லாவற்றையும் கவனித்தே வந்தார். ஒரு உருவம் தவிர மூன்று உருவங்கள் அறைவாயிலில் வந்து எட்டிப் பார்த்தன. அங்கும், இங்கும் நடமாடின.

அவ்வுருவம் நெருங்க, நெருங்க அதன் படபடப்பும், துடிதுடிப்பும் அதிகரித்து 'டப்டப்' என்ற ஓசை எழுந்தது அமைதி நிறைந்த அச்சூழ்நிலையில் நன்றாகத் தெரிந்தது. சதாசிவம் ஆடாது அசங்காது படுத்திருந்தார். அவ்வுருவம் நடுக்கத்தோடு சுற்றும் முற்றும் நோக்கியது.

அவ்வுருவம் எதிர்பாராதவிதம் சதாசிவம் சுருட்டி எழுந்தார். மெதுவான குரலில் "ரகு" என்றார்.

திடுக்கிட்ட அவ்வுருவத்திற்கு மூச்சு இறைத்ததும், அதை சமாளித்துக் கொண்டதும் நன்றாக அக்கும்பிருட்டிலும் புலனாகியது.

மறுபடியும் சதாசிவம் "எதற்கப்பா இந்த வீண்........" என்ற பேச்சை துவக்குவதற்குள், அவ்வுருவம் "டேய் கிழமே என்ன வேடிக்கை செய்கிறாய். ரகுவாம் ரகு. யார் அந்த ரகு? இரு உன்னை தீர்த்துக்கட்டி விடுகிறேன்" என்றது.

"ரகு! ஏன் கஷ்டப்பட்டு குரலை மாற்றிக் கொண்டு பேசவேண்டும். எனக்குத் தெரிந்துவிட்டது. இவ்வளவு நல்ல குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, தங்கக்கம்பி போன்ற

அண்ணனையும் பெற்று இருக்கையில் நீ ஏன் இப்படிப் பட்ட செயல்களில் இறங்கவேண்டும்? உன்னுடன் பந்தோபஸ்துக்காகக் கூட்டி வந்தாயா அவர்களை? எங்கே அவர்களையும் உள்ளே கூப்பிடு'' என்றவர் சடக்கென்று ரகுவின் முகமூடியை பிடுங்கி தன்னிடம் வைத்துக்கொண்டார்.

உள்ளே நிகழும் சம்பவங்களையெல்லாம் வெளியிலுள்ள முகமூடி நண்பர்கள் கண்ணுற்று ஒரே தாவில் தாவி வாசலை அடைந்து, திரும்பிப் பார்க்காமல் ஓட்டமும் பிடித்தனர்.

அவர்களும் ஓடிவிட்டதைப் பார்த்ததும் ரகுவின் நிலை மோசமாகிவிட்டது. சதாசிவம் விழித்திருப்பார் என்பது ஒரு எதிர்பாராத விஷயமாயிருந்து அதிர்ச்சிக்குள்ளாகியதோடு, ஆசைக்காட்டி, தூண்டி அழைத்துவந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பர்களின் ஓட்டமும் அவனை கோழையாக்கிவிட்டன. சுற்றும் விழித்தான்.

"ரகு! அவர்கள் போகட்டும். உனக்கு ஒரு ஆபத்தும் வராது நான் காட்டிக் கொடுக்கமாட்டேன். உன் சொத்து உன்னிடம் சேராமலா போகும்! உன் பங்கு கட்டாயம் உன்னுடையதே. இன்னும் மேலாகவும் கொடுப்பான் ரஞ்சன். அதற்காக இப்படி கண்ட தத்தாரிப்பிள்ளைகளோடு சேர்ந்து கேவலம் கொள்ளைக்காரன் போல் ஆகலாமா ரகு ?''

"பேச்சை நிறுத்து. அதிகமாகப் பேசினுல் இதோ பார்'' என்று மடியிலிருந்த கத்தியை எடுத்தான்.


"இதற்காகத்தானே வந்தாய். ரகு அநியாயம். என்னைக் கொல்வதைப் பற்றிக் கூறவில்லை. குடும்ப கௌரவ, கண்ணியத்தை புதைத்து சமாதி கட்டவா இந்த கத்தி? கொள்ளைக்காரன், கொலைக்காரன் என்ற பேர் வாங்காதே. ரகு எனக்குத் தெரிந்ததைக் கூறிவிட்டேன்'' என்றவர் அவன் கையிலிருந்த கத்தியையும் பிடுங்கிவிட்டார். அப்போதும் அவர் முகத்தில் வேறு வித உணர்ச்சிகளோ, சாயலோ, படியவில்லை.

ஆனல் ரகுவின் முகமோ தலைகீழாக மாறியது. 'அட இந்த கிழவனுக்கா இந்த பலம். என்ன நினைத்தோம். இங்கிருந்தால் ஆபத்துதான்' என்று அவன் மனம் எண்ணுவதற்கும், டெலிபோன் மணி 'கண கண' என ஒலிப்பதற்கும் ஒருமித்திருந்தது. அவ்வொலி நிற்பதற்குள் 'ஹலோ யார்' என்று எழுந்த முரளியின் குரலும் சேர்ந்தது.

வீட்டில் பலமுள்ள ஆட்கள் விழித்திருப்பதை அறிந்ததும் ரகுவின் உடலோடு, கால் துடித்துத் தடுமாறி ஓடின. வராந்தா பக்கம் போகும்போது...'யார்...ஓ....லக்ஷ்மி அம்மாளா... இந்த நேரத்தில் என்ன....உங்கள் வீட்டிலா....முக

மூடி அணிந்தா....ஹூம்....நான்கு பேரா........ஆமாம் தாத்தாவைக் கூப்பிடுகிறேன்....' என்று முரளி எதிரில் பேசுபவருக்குக் கூறும் துண்டு துண்டான பதில்கள் காதில் விழுந்தன.

இவ்வார்த்தைகள் ரகுவை சித்திரவதை செய்தன. 'ஐயோ அம்மாதான் பேசுகிறுள். இந்த இரவில் எப்படியோ கவனித்திருக்கிறுள். இதென்னடா தடைமேல் தடை' என்று நினைத்தவன் பதுங்கி, வேகமாக தன் இருப்பிடத்தை நோக்கி நடந்தான். அவன் நடக்கும்போதும், உட்காரும்போதும், உறங்கும்போதும் கூட அவனைச் சுற்றிச் சுற்றி பல கேள்விக் குறிகள் வட்ட மிடுவதைப் போன்ற ஒரு ப்ரமை அவனை உலுக்கிக்கொண்டிருந்தது.



சதாசிவத்தைக் கூப்பிடுவதற்குமுரளி எழுந்திருப்பதற்குள் சதாசிவமே, கத்தி முகமூடி சகிதம் அங்கு வருவதைக் கண்டு திடுக்கிட்டு வாயைப் பிளந்தான். "தாத்தா... தாத்தா..." என்று குழறினன்.

"முரளி! பயப்படாதே. உன்னுடன் போனில் பேசியது லக்ஷ்மிதானே. என்ன சொன்னுள்."

"என்னவோ....முகமூடி....நாலு பேர்....என்று..."

"அவள் முகமூடி என்றதும், நான் இந்த சமயத்தில் முகமூடி, கத்தியுடன் ப்ரசன்னமாவதும் சேர்ந்துவிட்டதால் பதறிவிட்டாய். எனக்கு பயித்தியமோ என்றும் எண்ணுகிருய் இல்லையா?"

"என்ன தாத்தா இதெல்லாம்?—எனக்கு எல்லாம் விளங்காத மர்மமாய் இருக்கிறதே."

"எல்லாம் விளங்கும் முரளி. பிறகு சொல்கிறேன். நீ போ, நான் பேசிக்கொள்கிறேன்" என்றவர் போனை எடுத்தார்.

"ஹலோ...முகமூடி விஷயமா...ஓ! முரளி சொன்னன்...வீட்டில் ரேவதியும் இல்லையா. எங்கே போயிருக்கிருள்?....சிநேகிதி வீட்டிற்கா...பயப்படாதே. துணைக்கு பார்வதியையும், முரளியையும் அனுப்பி வைக்கிறேன்...ஹூம்...காலை வருகிறேன்...." என்று சம்பாஷணைக்கு முடிவு கட்டினர்.

"பார்வதி! நீ உடனே ரஞ்சன் வீட்டிற்கு முரளியோடு போய் சேர். இரவு இருந்துவிட்டு காலை வா".

"திடீரென்று....என்ன?"

"அதற்கெல்லாம் இப்போது கூற நேரமில்லை. உம்... கிளம்பு" என்று அவர்களைக் காரிலேயே முரளியை ஓட்ட செய்து அனுப்பிவிட்டு, படுக்கையில் விழுந்தார்.

முரளியிடமும், பார்வதியிடமும் மறைத்து தைரியமாக பேசி அனுப்பி விட்டாரே தவிர, வயது மிகுதியால் இயற்கையாய் உள்ள தளர்ச்சியும், இந்த அதிர்ச்சியும் சேர்ந்து அவரை இருபது வயது பெரியவரைப்போல் ஆக்கி விட்டது. மார் படபடப்பு ஏற்பட்டு உள்ளுக்குள்ளேயே அழுத்திக் கொண்டிருந்தது.

* * *

மறுநாள் காலை முரளியும் பார்வதியும் திரும்பிய பிறகு, தன் காலை வேலைகளை முடித்துக் கொண்டு கிளம்பினர்.

சரோஜா அவரைப் பார்த்துவிட்டு உள்ளே ஓடினள். லக்ஷ்மியும் தொங்கிய முகத்தோடு வந்து நின்ருள். நேற்று முகமூடி மனிதர்களைக் கண்டது முதல் அவள் உடலில் அவளை அறியாமல் ஒரு வித நடுக்கம் ஏற்பட்டிருந்தது. அந்நிலையிலும் "ரகுவைப் பார்த்தீர்களா? எங்கிருக்கிருன்" என்றுதான் கேட்டாள்.


"பார்த்தேன்."

"இருக்கிருனு....உயிரோடு இருக்கிருனு...நான் அடித்த அடியில் ஓடிப் போனவன் எங்காவது விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டு விட்டானே என்று என் பெற்ற வயிறு பதறிக்கொண்டே இருந்தது."

"நன்ருக சௌக்கியமாய் இருக்கிருன். இங்கு ஏதோ முகமூடி மனிதன் வந்தான் என்று இரவு கூறினீர்களே. நீங்கள் எப்படி அவனைப் பார்த்தீர்கள்! வீட்டிற்குள்ளேயே வந்தானு?"

"அதை நினைத்தாலே உடல் சிலிர்க்கிறது. ரேவதி நடுவில் நல்லவள்போல் நடித்து நாடகமாடி இருக்கிருள். அதை இந்த பித்து நம்பி மோசம் போய்விட்டது. நேற்று காலையே ஏதோ ஒரு சிநேகிதி வந்தாள். இரு

வரும் குசமசவென்று பேசினர்கள். மணிக் கணக்கில் பேச என்ன விஷயமோ. பிறகு உள்ளே பாட்டுக்



குரல் கேட்டது. மெள்ள எட்டிப் பார்த்தேன். ரேவதி கட்டிலில் அமர்ந்திருந்தாள். அந்த பெண் பாடி நாட்டிய மாடிக் கொண்டிருந்தாள். அடிக்கடி ரேவதி 'சாந்தி சாந்தி' என்று இவளைப் பற்றி கூறிக்கொண்டிருந்ததால், இவள் தான் சாந்தி என்பது தெரிந்தது.''

"அந்தப் பெண் எப்படிப்பட்டவள்! யார் வீட்டு பெண் என்பதெல்லாம் தெரியுமாம்மா."

"நடையுடை பாவனையிலிருந்து பெரிய இடத்து பெண் போல இருக்கிறது. ஒரு சபை பாக்கியில்லாமல் இவள் ஆடியிருக்கிறுளாம். சினிமா, நாடகங்களில்கூட ஆடுவதாகக் கேள்வி."

"ஓஹோ....உம்....அப்படி என்ருல் ரேவதி இன்னும் வரவில்லையா?''

"ஹுஹும் அவளுடன் கல்யாணம் போகிறேன் என்று போனவள்தான். தகவலே இல்லை. முத்து வள்ளி கூட இல்லாதது இந்த சமயத்தில் கை உடைந்தாற்போல் இருக்கிறது. இதுவும் சோதனைதானே. குழந்தைகள் இருவரும், நானும்தான் வீடு முழுவதற்கும். மாடி அறையிலேயே படுத்துக் கொண்டோம். தூக்கம் வராததால் ஜன்னல் ஓரம் அமர்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நடு இரவு. நம் வீட்டு வாசலின் கேட்....அப்ப.... பயமாய் இருக்கிறதே..."

"தைரியமாய் சொல்லம்மா. நான் இருக்கையில்..."

"நான்கு பேர் முகமூடி அணிந்தவர்கள். கதவை ஓசை ஏற்பட தட்டினர், மனிதர்கள் தூங்கிவிட்டார்களா என்று பரீக்ஷை செய்வது போல். சுவர் தாண்டி குதித்து தோட்டத்தை ஒரு சுற்று சுற்றி விட்டு குசுமுசுத்தனர். தெருவில் இறங்கி சிறிது தூரம் நடந்திருப்பார்கள். உடனே ஒரு கார் புறப்பட்ட ஓசை கேட்டது. அவ்வளவு தான் நான் கண்டது..."

"கீழே தைரியமாய் இறங்கி வந்து போனவது செய் தீர்களே!"

"அசட்டு தைரியம் ஏற்பட்டது. அது இல்லாவிடில் நேற்று என்ன பாடுபட்டிருப்பேனோ. காரில் வந்ததால், நேராக வீட்டைச் சுற்றிப் பார்த்ததால் உளவு தெரிந்த பேர்வழிகளோ...என்று எனக்குச் சந்தேகம்."

"உம்....அப்படிதான்......இங்கு லீலைகள் முடிந்ததும் எங்கள் வீட்டில் ஒரு சிறு கலக்கம் ஏற்பட்டது. இதோ பாருங்கள்..." என்று தன் மடியில் ஒருவருக்கும் தெரியா மல் மறைத்து வைத்திருந்த முகமூடியையும், கத்தியையும் வெளியே எடுத்தார்.

'ஹா' என்று கூக்குரலிட்டாள் லக்ஷ்மி.

"நீ பார்த்த முகமூடி என்னிடம் எப்படி வந்தது. மேலும் கத்தி வேறு கர்ஜிக்கிறதே என்று பயப்படுகிறாய் இல்லையா. இங்கு வந்தவன் அங்கு வராமல் இருப்பானா?...." என்று ஆரம்பித்து நடந்தது முழுவதையும் ஒரே மூச்சில் கூறி முடித்தார்.

"இங்கு முன் ஏற்பாட்டோடு வராததால் போய்விட் டான். அங்கு நால்வரில் ஒருவன் முன்னேற்பாடாக உள்ளே புகுந்து வழி செய்து வைத்திருக்கிறான். நான் இதையெல்லாம் எங்கே கவனிக்கிறேன். எவனாவது நின் றிருந்தாலும் குழந்தைகளுடைய சிநேகிதர்கள் என்று போய் விடுவேன். வந்தவன் முதலில் என்னிடம் வந் தானே. நேரே பின்பக்கம் போய் முத்துவைத் தாக்கி யிருந்தால் அவன் இருக்கும் நிலையில் என்ன நேர்ந் திருக்குமோ. அதுமட்டும் அவன் கிராமம்போனது நல்லதா யிற்று"

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால்...முத்துவிற்குகூட விரோதியானவன்... உளவு தெரிந்தவன்..."

"யாருமில்லையம்மா....யாருமில்லை....நம் ரகுவேதான்..."

"ஐயோ...." என்று அப்படியே சாய்ந்தாள் லக்ஷ்மி. கூச்சல் கேட்டு வாஸுவும், சரோஜாவும் அலறி ஓடி வந்த னர். லக்ஷ்மியின் படபடப்பு அடங்கி அவள் கண்ணைத் திறக்க சிறிது நேரம் பிடித்தது. அவள் வாய் அடிக்கொரு தடவை 'ரகுவா...ரகுவா....' என்று ஹீனஸ்வரத்தில் அசைந்து கொண்டே இருந்தது.

"லக்ஷ்மி! இதற்கெல்லாம் நீ மனதைத் தளர விட்டுவிட்டால், பிறகு என்ன ஆவது. குடும்பத்திற்கு பெரியவள் நீ என்பது நினைவிருக்கவேண்டும். நான் சொல்வதைப் பூராவும் கேள்.''

"என் மனது தாங்கவில்லையே. பெற்றப் பிள்ளையைக் கண்ணெதிரில் கொள்ளைக்காரனுகவும், கொலைகாரனுகவுமா காண்பது என்று....நினைத்தாலே நெஞ்சு பிளக்கிறதே. இவ்வளவு விபரீத வேலையில் சேர்ந்துவிட்டவனை திருத்தி, வீட்டிற்கு அழைத்து வருவது....''

"அழைத்து வரலாம்... அவன் இருப்பிடத்தை அறிய இத்தனை நாளாகியது. சிலர் அவன் சர்கஸில் சேர்ந்துவிட்டான் என்று கூறினர். பலர் பலவிதம் கூறுவதில் என்ன வியப்பு. எல்லாவற்றையும் மேலோட்டமாகக் கண்டுகொண்ட நான் இன்று அவனை நேரில் போய் சந்தித்து, ஏதாவது முடிவு செய்ய எண்ணியிருந்தேன். என்னை முந்திவிட்டான் அவன். நேற்று அவன் அங்கு வந்தபோதும் என்னுல் முடிந்தவரை கூறினேன். இரவு வேளையானதால், திருட்டுத்தனமாய் வந்திருப்பதால் எதிர்த்து வாயாட முடியவில்லை...''

சதாசிவம் பேச்சை நிறுத்தியும் லக்ஷ்மி ஒன்றும் கூறுது ப்ரமை பிடித்த உருவமாய் அமர்ந்திருந்தாள். அவள் சித்தம் கலங்கித் தவிக்கிறது என்பதை உணர்ந்த சதாசிவம் மேலே தொடர்ந்தார்.

"ரகுவை இப்படியே விட்டுவிட்டால் நடக்குமா? அவனைத் திருத்த யோசனை செய்து அதை நிறைவேற்றுவது முதல் காரியம். அவன் தன் சொத்து தன்னிடம் சேருவதற்காகத்தானே இத்தனை கஷ்டங்களையும் கொடுக்கிருன். பணத்தை அவனிடம் கொடுத்து விட்டால் வீட்டிற்கு வந்துவிடுவான். பிறகு கண்டித்து கெட்ட பழக்கங்களிலிருந்து மீட்டுவிடலாம். எனக்கு வேறு வழி ஒன்றுமே தோன்றவில்லை.''

"ஐயோ........வேண்டவே வேண்டாம். பணத்தைக் கொடுத்தாலும் வீட்டுக்கு வரமாட்டான். அத்தனையும் துலைத்துவிட்டு என் பங்கையும், ரஞ்சன் பங்கையும் வேறு பிடுங்கி விடுவான்,''

"ஹூம்... பிறகு வேறு என்னசெய்வது. நேற்று என்னிடம் வந்து வாலாட்டினுன்....அதே போல் பிறரிடம் செய்தால் ஆபத்து, அவமானம் எல்லாம் ஒன்ருக வந்து குடும்பத்தையே அழுத்திவிடும்.

மேலும் மற்றெரு முக்கியமான விஷயம். ரகு, ரகுவின் விரோதிகளாகிய நமக்குத் தீங்கிழைக்க சில நண்பர்களை உதவிக்கு அழைத்து வந்தான்.

வந்த நண்பர்களுக்கு எத்தனை விரோதிகளோ? இவர்கள் அவர்களை எதிர்க்கும் சமயம், ரகுவிற்கு அவர்கள் உதவி செய்ய வந்ததால் ரகு அவர்களுக்கு உதவி செய்யப் போவான். அப்போது அகப்பட்டுக் கொண்டால்....கதி.... கோர்ட்...சிறைவாசம், என்றுவேறு குடும்பம் அலக்கழிக் கப்பட்டு தத்தளித்துப் போகும். இதை எல்லாம் யோசனை செய்துதான், மிஞ்சுவதற்குள் அணை போட்டாற்போல் இப்படி அழைத்து வந்துவிடலாம் என்று தோன்றுகிறது"

"எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. நான் மனித உலகத்திலேயே இல்லைபோல் இருக்கிறது. இப்படிப்பட்ட விபரீதங்கள் பின்னல் வரப்போகிறது என்று தெரிந்தால் ரஞ்சனையாவது அனுப்பாதிருந்திருக்க லாம்."

"கடந்ததைப் பற்றி இப்போது யோசித்து என்னம்மா பயன். இவ்விஷயம் ஊர் அறிந்தால் காற்று மூலமாக அமெரிக்காவுக்கு—ரஞ்சனுக்கு—எட்டிவிடும். அவன் நிம் மதியைக் கலைக்கக் கூடாது. அது முக்யமாய் ஞாபகத்தில் இருக்கவேண்டியது" என்றார்.



ஆனால் லக்ஷ்மி அம்மாளின் வாய்திறக்க மறுத்தது, பாக்கு வெட்டியின் மத்தியில் அகப் பட்ட வஸ்து வாய்த் துடித் தாள்.

* * *

"என்னவள்ளி! வந்து நாலுநா ளாச்சே... ஊரு க்குக் கிளம்பலா மா?" என்றுதன் அருகில் அமர்ந் திருந்த தன் மனைவியைக் கேட்டான் முத்து.

"ஊருக்கா...மச்சான்...." என்று இழுத்தாற் போலக் கேட்டாள் வள்ளி.

"ஏன் வள்ளி! உனக்கு இன்னும் இங்கே இருக்க வேணும் போல இருக்குதா. அண்ணன், அண்ணியை விட்டு பிரியமுடியலியா?...அப்படின்னு நீ இருந்துட்டு வா. நான் போவணும்."

"இல்லே...போவணும்னு எங்கே போறது?"

"இது என்ன கேள்வி. நம்ம வூட்டுக்குதான்.... மொதல்லே சதாசிவஐயாவூட்டுக்குப்போயி நாலுவார்த்தை பேசிபுட்டு போவலாம். என்ன?"

"நான் சொல்றேன். என்னையும் இந்த பாடுபடுத்தி, உங்களையும் இப்படி செய்து...இத்தனை நடந்தும் திருப்பி அந்த வூட்டுக்...."

"அதுக்கா இத்தனை பீடிகை.......அந்த வூட்டுக்குதான் போகப்போறேன்....போவணும்...அவங்களுக்காக இல்லே வள்ளி....நம்ம ரஞ்ச..." என்னும்போது அவன் நெஞ்சு துக்கத்தால் அடைத்து விம்மியது.

"சரி போவலாம். நீங்க மனசுக்கு கஷ்டப்படவேண்டாம்." என்றவள், உடனே உள்ளே சென்று சாமான் களை எடுத்து வைத்து தயாரானாள்.

"என்ன வள்ளீ! கிளம்பிட்டீங்களா?" என்று அண் ணனும் அண்ணியும் ஏககுரலில் கேட்டபோது, "ஹூம்... போகவேணும்?..." என்று ஒரே வார்த்தையில் அவர் களையே கேள்வியால் மடக்கி விட்டாள் வள்ளி.

"உங்களுக்கு உடம்பு சுகமில்லே என்று கேட்டதும் வள்ளி துடிச்சு பூட்டது. அவ நெனச்சது போலவே ரொம்ப இளைச்சுட்டீங்க. இப்போ வேலை செஞ்சா உடம் புக்கு ஆகுமா!" என்று வள்ளியின் அண்ணி முத்துவைக் கேட்டதற்கு "இப்போது ஒன்றுமில்லே உடம்புக்கு, குண மாயிட்டது" என்று சிரிச்சு மழுப்பிவிட்டு, குடும்ப சகிதம் கிளம்பியும் விட்டான்.

சதாசிவம் கூறியபடியே முதலில் அவர்கள் வீட்டில் போய் இறங்கினான். வீடு சுறுசுறுப்பில்லாமல் தூங்கி வழிவது போல் முத்துவின் கண்களுக்குத் தென்பட்டது. வீட்டின் உட்புறமும் ஜனநடமாட்டமே இல்லாது எல்லோ ரும் ஒவ்வொரு அறைகளில் அடைந்து கிடந்தனர்.

பார்வதி தலையும் வேஷமுமாக அமர்ந்திருந்தாள்.

"சௌக்கியமாம்மா! ஐயா எங்கேம்மா" என்று முத்து குசலம் விசாரித்தான்.

அலுப்போடு "அவர் எங்கே போவார். நான் எத்தனை சொன்னாலும் கேட்காது அந்த ரஞ்சன் தம்பி விஷய மாகத் தான் அலைந்து கொண்டிருக்கிறார். என் பேச்சைக் கேட்டிருந்தால் இப்படி எல்லாம் ஏன் நடக்கிறது?" என் றாள். அவள் குரலில் கவலையும், விரக்தியும் நிறைந்திருந் தது. அவள் மனநிலையில் 'ரகு' என்ற பெயரைக்கூட

உச்சரிக்க பிடிக்கவில்லை. அதனல்தான் ரஞ்சன் தம்பி என்று கூறினள்.

"என்னம்மா நடந்தது? உங்க முகத்தையும், பேச்சையும் பார்த்தா ஏதோ முக்யமானது நடந்திருக்கிறதுன்னு தெரியுது. மறுபடியும் ரகுவைப்பற்றி என்ன..."

"இந்த வயதான காலத்தில் சிவனே என்று படுத்து கிடக்காமல் இவரை சாறுபிழிய அந்த பாவி ஒருவன்." என்றவள் நடந்ததை சதாசிவம் கூறியபடியே ஒப்பித்தாள்.

இதைக் கேட்ட வள்ளி "மச்சான்! நான் சொன்னது சரியாப் போச்சு. நாம் அடியோடு தப்பினேம். நம்ம ஐயாவை, இம்மாம் பெரிய வீட்டுக்குள்ளே, ராத்திரி வந்து கத்தியைக் காட்டி....ஐயோ...போதும்...நம்ம கதி என்ன வாவறது?"

"சும்மாயிரு வள்ளி...மேலே என்னம்மா நடந்தது?"

"நடக்கிறது என்ன? என்ன விஷயம் என்று கேட்டால் எனக்கு இதையெல்லாம் சொல்லாது மறைத்தார். ஏற்கனவே நான் பயந்து வெளியே போகக்கூடாது என்று அவரை நச்சரித்துக் கொண்டிருந்ததால், இந்த விஷயத்தைச் சொன்னல், நான் அவரை வெளியேவிடாது எங்கு பிடித்துக் கொண்டு விடுவேனே என்ற பயம். இது தெரிந்தது முதல் என் உடல் ஒரு நிலையில் இல்லை."

"அம்மா கவலைப்படாதீங்கம்மா. ஐயா எல்லோருக்கும் நல்லதுதானே செய்கிறர். நமக்கும் கடவுள் நல்லது செய்வார்" என்று தனக்குத் தெரிந்த வேதாந்தத்தைக் கூறினன்.

"மனசை வேற விசயத்திலே திருப்புங்க. ரஞ்சன் ஐயாவிடமிருந்து கடுதாசி வறதுங்களா! எப்படி இருக்காராம்?"

"ஹூம்...வருகிறது. அவனுக்கென்ன கெட்டிக்காரப் பையன். நன்ருகப் பிழைத்துப் போவான். நூறு ஆயுசு இருக்கவேண்டும். அந்தக் குழந்தையால்தான்—அவன் மரியாதைக்கும், குணத்துக்கும்தான்—இந்த பிடாரிகளின் கொட்டங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிருேம். இல்லாவிடில் என்றைக்கோ, அவன் அப்பாவுடன் போகட்டும் சிநேகம் என்று உதறி தள்ளியிருப்போம்" என்ருள் ஆக்ரோஷத்துடன்.

என்ன மனநிலையிலும் ரஞ்சனின் பேச்சை எடுத்தால், சாந்தியும், பூரிப்பும் உண்டாவதை கவனித்த முத்து, மனதிற்குள்ளேயே எப்போதும்போல் ப்ரார்த்தித்துக் கொண்டான்.

183209